தொடர் - 6

# வேதாகம தீர்க்கதரிசனம்


பாடம் 1 தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம்.

பாடம் 2 அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம்.

பாடம் 3 இரண்டாம் வருகை குறித்த தவறான கருத்துக்கள்.

பாடம் 4 திருச்சபை எடுத்துக் கொள்ளப்படுதல்

பாடம் 5 அவரது வருகைக்குரிய அடையாளங்கள்

பாடம் 6 கிறிஸ்துவின் நியாயாசனம்

பாடம் 7 மகா பெரிய உபத்திரவகாலம்

பாடம் 8 திருச்சபையும் உபத்திரவ காலமும்

பாடம் 9 பூமியிலே ஒரு பொற்காலம்

பாடம் 10 ஒரு வேளை இன்று நேரிடலாம்!



ஆங்கிலம்: பிரான்ஸிஸ் டிக்சன்

தமிழில்: P. A. சுந்தர ராஜன்

தொடர் - 6

# வேதாகம தீர்க்கதரிசனம்

## பாடம் - 1 தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம்.

அறியாமை என்னும் மன்னிக்கமுடியாத குற்றத்திலிருந்து நாம் விடுதலையடைவதற்கும், கடவுள் தமது தீர்க்கதரிசனத் திட்டத்தினை வெளிப்படுத்தும்போது (மத்தேயு 22:29) அதற்கு நாம் நம்மை ஆயத்தப்படுத்துவற்கும், நாம் வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்க வேண்டும். எதிர்காலத்தைக் குறித்துத் துல்லியமாகக் கூறும் ஒரே நூல் வேதாகமம் மட்டுமே எனலாம். பல்வேறு காரணங்களினால், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனங்களைப் படிப்பதேயில்லை. அவற்றுள் சில இங்கே:

1. தீர்க்கதரிசனம் ஆழ்ந்து படிக்க வேண்டிய ஒன்று. அது கடினமானது என்று மக்கள் சிலர் தவறாகக் கருதுகின்றனர். இது உண்மைதான். ஏனெனில் அவற்றின் நிறைவேற்றத்தைக் காணும்போது மட்டுமே தீர்க்கதரிசனத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் 2தீமோத்தேயு 2:15க்குக் கீழ்ப்படிந்து நடக்கும் மக்கள் மட்டுமே வேதாகமத்தில் வெளிப்படுத்தப் பட்டுள்ள முக்கியமான தீர்க்கதரிசன உண்மைகளை அறிந்து கொள்ள இயலும்.

2. தீர்க்கதரிசனத்தைப் படிப்பது ஊகங்களுக்கு வழிநடத்தும் என சிலர் கருதுகின்றனர். இதிலும் ஒரு அபாயம் உண்டு. கடவுளின் சத்தியத்தை நாம் படிக்கும்போது நிச்சயமாகவே ஆவியானவராலே நடத்தப் படுகின்றோமா என்பதே அது.

3. இன்னும் சிலர், தீர்க்கதரிசனம் தெளிவின்றி தோன்றுவதினால், அதைப் படிப்பவர்களை நம்பிக்கை யின்மைக்குள் தள்ளும் எனக் கருதுகின்றனர்.. ஒரு விசுவாசி நம்பிக்கை யற்றிருக்க முடியுமா? ஏசாயா 53:11, எபிரெயர் 10:13 கூறுவதைக் கேட்கவும்.

நாம் ஏன் தீர்க்கதரிசனத்தைப் படிக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. வேதாகமத்தின் பெரும்பகுதி தீர்க்கதரிசனமாகவேயுள்ளது. இப்பகுதியை நாம் படிக்காமல் விட்டுவிட்டால், வேதாகமத்தின் பெரும் பகுதியை நாம் புறக்கணிப்பதற்கு ஒப்பாகும். வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டிப் பாருங்கள். அதிலே கூறப்பட்டுள்ள பெரும்பாலான தீர்க்கதரிசன வசனங்களை கவனிக்கவும். வேதாகம தீர்க்கதரிசனங்களிலே பெரும்பாலானவை நிறைவேற வேண்டியுள்ளன என்பதை நினைவிற் கொள்க. நாம் தீர்க்கதரிசனங்களைப் படிக்காமல் விட்டுவிட்டால் நாம் பழைய ஏற்பாட்டின் ஒரு குறுகிய எல்லைக்குள் நம்மை அடைத்துக் கொள்கிறோம். அதோடு நாம் நான்கு சுவிசேஷங்களில் ஆண்டவர் இயேசு கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். அவற்றுள் பெரும்பாலானவை தீர்க்கதரிசனமே. நிருபங்களிலும் நாம் தீர்க்கதரிசனத்தை மிகுதியாகக் காணலாம். அப்படியே வெளிப்படுத்தல் நூலும்கூட. வேதாகமம் முழுவதும் கடவுளால் அருளப்பட்டது. அதிலே நாம் வரப்போகின்ற காரியங்களைக் குறித்த கடவுளின் செய்தியைக் காணலாம்.

2. தீர்க்கதரிசனப் பகுதியை நாம் புறக்கணித்தால், வேதாகமத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. வேதாகமம் மகிமையான முழுமை பெற்ற நூல். முழு புத்தகத்திலும் நாம் ஒற்றுமையைக் காணலாம். நாம் முழு வேதாகமத்தை ஏற்றுக் கொள்ளும்போதுதான் கடவுள் நாம் அறிய வேண்டுமென்று விரும்புகிற சத்தியங்களை அறிந்து பகுத்துப் போதிக்க இயலும். (2தீமோத்தேயு 2:15) ‘புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டினால் முடப்பட்டிருக்கும் போதுதான் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டில் வெளிப்படும்‘. நாம் முழுமையான செய்தியை அறிந்து கொள்ள பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் படிக்க வேண்டும்.

3. நாம் ஏன் தீர்க்கதரிசன வார்த்தையைப் படித்துப் புரிந்து கொண்டு நம்ப வேண்டுமென்பதற்கென ஒரு சிறப்பான காரணம் உண்டு. லூக்கா 24 இல் 25,27 வசனங்களில் கூறப்பட்ட 'யாவையும்', 'சகல'. 'எல்லாவற்றிலும்' என்று கூறப்பட்டுள்ள வார்த்தைகளைக் கவனிக்கவும். இதன்மூலம் நமது ஆண்டவர் தீர்க்கதரிசன வார்த்தைகளை, உறுதிப்படுத்தி அவை நம்பத் தகுந்தவையென முத்திரை வெட்டாகக் கூறியுள்ளார். தீர்க்கதரிசனங்களை, குறிப்பாக அவரை வெளிப்படுத்தும் வசனங்களை ஏன் படிக்கவேண்டும்? என்பதற்கான ஆணித் தரமான காரணம் இதுதானே. லூக்கா 24:27 ஐயும் யோவான் 5:39ஐயும் படிக்கவும்.

4. வேதாகமம் கடவுளால் அருளப்பட்டது. அது துல்லியமானது, உறுதியானது என்பதை வேதாகமத்தில் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் உறுதிப்படுத்துகின்றது. இது எப்படி? வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் யாவும் முழுமையாக, எழுதப்பட்டபடியே

*நிறைவேறியுள்ளது. மேசியாவின் வருகை குறித்தத் தீர்க்கதரிசனம், யூதர் புறஜாதியார் குறித்தத் தீர்க்கதரிசனங்கள் யாவும் அவைகள் நிறைவேறுவதற்கு பல நூற்றாண்டுகட்கு முன்பு எழுதப்பட்டவை. அவற்றுள் ஆண்டவரின் முதலாம் வருகை குறித்த தீர்க்கதரிசனங்களைப் பார்க்கலாம். ஏசாயா 40:3 அவரது முன்தூதன் யோவானைப் பற்றிக் கூறுகிறது. ஏசாயா 7:14 ஆண்டவர் கன்னிகையிடம் பிறப்பார் எனக் கூறியுள்ளது. மீகா 5:2 இல் அவர் பெத்லகேமிலே பிறப்பார் என்றுள்ளது. சங்கீதம் 72:10 இல் ஞானிகள் அவரைத் தேடி வருவதைக் கூறியுள்ளது. ஏசாயா 53 இல் அவர் தமது மக்களின் பாவத்தைச் சுமப்பார் என்றும் கூறியிருக்கக் காணலாம். சகரியா 11:12,13 இல் அவர் காட்டிக் கொடுக்கப்பட்டு, 30 வெள்ளிக்காசுக்கு விற்கப்படுவதாக உள்ளது. சங்கீதம் 22:14,17 இல் அவரது சிலுவைப் பாடுகளையும், ஏசாயா 53:9 இல் அவர் பணக்காரரோடு அடக்கம் பண்ணப்படுவதையும், சங்கீதம் 16:8-10 இல் அவர் உயிரோடு எழும்புவார் எனவும், சங்கீதம் 68:18 இல் உன்னதத்திற்கு ஏறிப்போவார் எனவும் முன்னுரைக்கப் பட்டிருக்கக் காண்கிறோம்.*

*இவ்விதமாக ஆண்டவரின் முதலாம் வருகை குறித்தத் தீர்க்கதரிசனங்கள் யாவும் கூறப்பட்டதின்படியே நிறைவேறிற்று. இந்த உண்மை நமக்கு வேதாகமத்தின் மீது உறுதியான நம்பிக்கையைக் கொடுக்கிறதல்லவா! இவ்விதமாக அவரது இரண்டாம் வருகை குறித்த தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும் என்பதையும் இன்னும் நிறைவேற வேண்டிய மற்ற தீர்க்கதரிசனங்களும் அவ்வாறே நிறைவேறும் என்பதையும் இவை உறுதிப் படுத்துகின்றதல்லவா!*

*5. தீர்க்கதரிசன வசனங்களை நாம் படித்தாய்வு செய்யும்போது மட்டுமே, நாம் கடவுள் என்ன செய்கிறார் என்பதை அறிந்து நம்மை நிகழ்வுகட்கு ஆயத்தப்படுத்த முடியும். தீர்க்கதரிசன வசனங்கள் என்பது கடவுளின் திட்டத்திற்கான வரைபடம். ஆமோஸ் 3:7, ஆதியாகமம் 18:17, யோவான் 15:15, 16:4. இவற்றோடு ரோமர் 11:25, 1கொரிந்தியர் 10:1, 1தெசலோனிக்கேயர் 4:13 ஐ ஒப்பிட்டுப் பார்க்க.*

*6. உலகம் முழுவதும் பயத்தினால் பீடிக்கப்பட்டிருக்கும் வேளையில், தீர்க்கதரிசனங்கள் நமது விசுவாசத்தை உறுதிப் படுத்துவதாகவுள்ளது. லூக்கா 21:26 இல் கூறியுள்ளபடியே இன்றைய உலக மக்கள் உள்ளனர். லூக்கா 21:28 இல் கூறப்பட்டவை விசுவாசிகட்குப் பொருந்தும். நம் வாழ்வில் கடவுளுக்கு இடமளிக்காமல், இவ்வுலகில் இருக்கும் அமைதியின்மை, போருக்கு நாடுகள் ஆயத்தப்படுதல், கொடூரம் போன்றவற்றைப் பார்த்துப் பயப்படுகிற நாம் எவ்வாறு மற்றவர்களுக்கு உதவமுடியும்?*

*7. எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகின்றதென்று கூறி, நாம் அவிசுவாசிகளை எச்சரிக்க வேண்டும். இதைச் செய்வதற்கு நாம் வரப்போகும் நாட்களுக்கென கடவுள் வைத்துள்ள திட்டத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் யோவான் ஸ்நானன் மத்தேயு 3:7 இல் கூறியுள்ள எச்சரிக்கையை எதிரொலிக்க வேண்டும். கிறிஸ்துவைப் புறக்கணித்த உலகின்மேல் சீக்கிரமாக கடவுளின் நியாயத் தீர்ப்பு வரவிருக்கிறது என்று கூற வேண்டும். 2தெசலோனிக்கேயர் 1:7-9 எசேக்கியேல் 33:7,8 இவைகளைக் காட்டிலும் எச்சரிக்கையான வார்த்தைகள் வேறு ஏதாகிலும் உண்டா?*

*8. இந்தக் கடைசி காலத்தேயுள்ள சூழ்ச்சிகட்கும், குற்றங்கட்கும் நாம் நம்மைக் காத்துக் கொள்வதற்கு நாம் தீர்க்கதரிசன வாக்கியங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும். நாம் தொடர்ந்து 2தீமோத்தேயு அதிகாரம் மூன்று வாசிக்க வேண்டும். குறிப்பாக வசனங்கள் 1-13 படிக்கவும். அதிலே நாம் இக்காலத்தின் நிலையை அறியலாம். வசனங்கள் 14-17 இல் நாம் இவ்வகை கொடிய செயல்களின் இழுப்புக்குத் தப்புவது எப்படி எனக் காணலாம்.*

*9. தீர்க்கதரிசன சத்தியங்களை நாம் உள்ளத்திலே ஏற்றுக் கொள்ளும்போது, அது நமது நடக்கையிலும், பண்பிலும், மாறுதலை ஏற்படுத்தும். ரோமர் 15:4 இல் தீர்க்கதரிசனங்களைப் படிக்கும்போது ஏற்படும் 3 விளைவுகளைக் காணலாம். இதைப் பற்றி தானியேல் 10:19 இல் கூறியிருக்கக் காண்கிறோம்.*

*10. கடவுளின் தீர்க்கதரிசன சத்தியங்களைப் படித்துத் தியானிக்கிற மக்களுக்குச் சிறப்பான ஆசீர்வாதம் வாக்குத்தத்தமாக அருளப்பட்டுள்ளது. இதை நாம் வெளிப்படுத்தல் 1:3, 22:7 இல் காணலாம்.*

## பாடம் 2 அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வெளிப்படையான, காணக்கூடிய சரீரப் பிரகாரமான வருகையைக் குறித்தத் தீர்க்கதரிசனமே கடவுளின் வார்த்தையில் நிறைவேறாத தீர்க்கதரிசனமாயுள்ளது. இந்தப் பாடத்தில் நாம் 2பேதுரு 3:3,4 இல் கேட்கப்பட்டுள்ள கேள்விக்குரிய பதிலை ஆராய்வோம். இது பரியாசக்காரர் கேட்கும் கேள்வி. ஆனால் நாமோ இக் கேள்வியைக் கருத்தோடும், பயபக்தியோடும் கேட்கலாம். அப்படி நாம் செய்யும்போது, ஆண்டவரின் இரண்டாம் வருகையைக் குறித்த ஏராளமான உறுதியான சாட்சிகளைக் கண்டு வியப்படைவோம். நாம் இக்கேள்வி கேட்கப்பட்ட சூழ்நிலையைக் கவனிப்பது நன்று. 2பேதுரு 3:3-4 இல் நாம் அறிந்து கொண்ட ஒரு நிச்சயமான காரியத்தைக் காண்கிறோம். அதுவும் குறிப்பாக கடைசி நாட்களில், கிருபையின் காலத்தின் கடைசியில் நடப்பது தொடர்பானது. இக்காலம் ஆண்டவரின் வருகைக்கு முந்தினது. இந்தக் கடைசி காலத்தே பரியாசக்காரர் தோன்றுவர் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டும். ஏன்? ஏனெனில் 'கிறிஸ்துவின் வருகை'யான இந்த மகிமையான சத்தியத்தைப் பரியாசம் பண்ணுகிற யாவரும் இத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறார்கள்! இந்தப் பரியாசக்காரர் என்ன கூறுவார்கள் என்பதைப் பேதுரு திட்டமாகக் கூறியுள்ளார். ஆனால் நம்முடைய கேள்வி 'அவர் வருவார் எனக் கூறிய வாக்குத்தத்தம் எங்கே?' என்பதே. இதற்குரிய ஏழு பதில்களை நாம் காண்போம்.

<u>1. பழைய ஏற்பாட்டில் அவர் வருகை குறித்த வாக்குத்தத்தம்.</u> பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்கள் உண்டு. அவற்றுள் மோசேயின் புத்தகங்கள் ஐந்து. இவை பஞ்சாகமம் எனப்படும் (ஆதியாகமம் முதல் உபாகமம் வரை), வரலாற்று நூல்கள் பன்னிரண்டு (யோசுவா முதல் எஸ்தர் வரை), பாட்டாகமங்கள் ஆறு (யோபு முதல் உன்னதப்பாட்டு வரை, புலம்பல்) பதினாறு தீர்க்கதரிசன ஆகமங்கள் (ஏசாயா முதல் மல்கியா வரை) என்று பிரிக்கலாம். இந்த ஆகமங்கள் அனைத்தும் குறித்து 2தீமோத்தேயு 3:16, 2பேதுரு 1:21 இல் கூறியுள்ளதைப் பார்க்கிறோம். இந்த ஐந்து வகை நூல்களிலும் அவரது வருகை குறித்த வாக்குத்தத்தங்களைக் காணலாம். அவற்றுள் குறிப்பிட்ட சில பகுதிகளைக் கீழே காணலாம்.

ஆதியாகமம் 3:15இல் 'அவர் குதிங்காலை நசுக்குவாய்' என்பது அவரது முதலாம் வருகையைக் குறிப்பதாகும். இது கல்வாரியிலே நிறைவேறிற்று. அங்கு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். 'அவர்' (என்பது ஸ்திரீயின் வித்து, ஆண்டவர் இயேசு) 'உன் தலையை நசுக்குவார்' என்பது அவரது இரண்டாம் வருகையைக் குறிப்பதோடு, நமது ஆண்டவர் இறுதியாகச் சாத்தானை முறியடிப்பார் என்றும் கூறுகிறது (2தெசலோனிக்கேயர் 2:8, வெளிப்படுத்தல் 20:1-3).

ஆதியாகமம் அதிகாரங்கள் 22,23,24 ஆபிரகாம் (பிதாவாகிய கடவுளுக்கு முன்னடையாளம். எலியேசர் - ஆபிரகாமின் வேலையாள் (பரிசுத்த ஆவியானவருக்கு முன்னடையாளம்), ஈசாக்கு (ஆண்டவராகிய இயேசுவுக்கு முன்னடையாளம்) ரெபேக்காள் (மணவாட்டியான திருச்சபைக்கு முன்னடையாளம்). ஆதியாகமம் 41:45 யோசேப்பு (கிறிஸ்துவுக்கு முன்னடையாளம்) புறக்கணிக்கப் பட்டபோது அவர் ஒரு புறஜாதியைத் தன் மணவாட்டியாக்கினார் (ஆதியாகமம் 42:8 ஒப்பிடுக)

ஆதியாகமம் 49:10 இதற்கு விளக்கம் தேவையில்லை

1சாமுவேல் 16:11 தாவீதின் உன்னத குமாரனின் படம்

2 இராஜாக்கள் 2:11, 1தெசலோனிக்கேயர் 4:17 உடன் ஒப்பிடுக.

சங்கீதம் 22,23,24 சங்கீதம் 22 அவரது மரணத்தைப் பற்றிக் கூறும் தீர்க்கதரிசனம். சங்கீதம்23 இப்போதைய விசுவாசிகட்குரியது. சங்கீதம் 24 நிறைவேறக் காத்திருப்பது.

ஏசாயா முதல் மல்கியாவரை தீர்க்கதரிசனங்கள் யாவும் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தங்கள். அவரது முதலாம் வருகையில் நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் இதில் உண்டு. அவைகள் மீண்டும் அவர் வரும்போது நிறைவேறக் காத்துக் கொண்டுள்ளன. ஏசாயா 61:1,2ஐ லூக்கா 4:18-19 உடன் ஒப்பிட்டுப் பார்க்க. அவரது இரண்டாம் வருகையைக் குறித்து பழைய ஏற்பாடு முழுமையும் நிறைந்துள்ளதைக் காணலாம்.

*<u>2. நான்கு சுவிசேஷங்களில் அவரது வருகை குறித்த வாக்குத்தத்தம்:</u> நான்கு சுவிசேஷங்களில் நமக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆதிகாரப்பூர்வமான வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளது. அவர் தமது இரண்டாம் வருகையைக் குறித்து மீண்டும் மீண்டும் கூற நாம் இதிலே காணலாம். கீழே சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம். மத்தேயு 16:21,27; 24:3,27,35,36,37, 44; 25:113: மாற்கு 13:2427: லூக்கா 19:1127; 21:2528: யோவான் 14:13; 21:21,22. இவ்வாறு நமது இரட்சகரின் கூற்றுகளிலும் அவரது உவமைகள் யாவற்றிலும் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம் ஏராளமாயுள்ளதைக் காணலாம்.*

*<u>3. அப்போஸ்தலருடைய நடபடிகளில் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம்.</u> இதிலே குறிப்பாக இரண்டு முக்கிய வேதபகுதிகள் உண்டு. அப்போஸ்தலர் 1:9 11 தூதர்களின் சாட்சி மிகமுக்கியமானது எனலாம். ஏனெனில் அவரது பிறப்பின் போது அவர்கள் கூறியபடியே நடந்தேறினது (லூக்கா 1:2833, 2:8 14) அவரது உயிர்த்தெழுதலின்போது அப்படியே (மத்தேயு 28:1-8). அப்போஸ்தலர் 15:14-17 வசனம் 14ல் கடவுள் இப்போது உலகில் நடப்பித்து வருவதைக் காணலாம். வசனங்கள் 16,17இல் இனிமேல் நிறைவேற வேண்டியவை..*

*<u>4. பவுல், யாக்கோபு, பேதுரு, யூதா ஆகியோர் எழுதின நிருபங்களில் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம்.</u> பவுல் 1கொரிந்தியர் 4:5;15:51,52, கொலோசெயர் 3:4, 1தெசலோ னிக்கேயர் 4:13-18 தீத்து 2:11-13, எபிரெயர் 9:24-28*

*யாக்கோபு யாக்கோபு 5:7,8*

*பேதுரு - 1பேதுரு 1:10,11; 5:4; 2பேதுரு 3:3,4*

*யோவான் 1யோவான் 2:28; 312*

*யூதா - யூதா 14*

*<u>5. வெளிப்படுத்தலில் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம்.</u> அவரது வருகையை நீக்கி விட்டால் .வெளிப்படுத்தலில் ஒரு அர்த்தமும் இராது. வெளிப்படுத்தல் 1:7;22:7; 12, 20 இல் வெளிப்படுத்தலின் முழு செய்தியும் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது.*

*<u>6. கர்த்தருடைய பந்தியில் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம்</u> 1கொரிந்தியர் 11:23-26 வரை படிக்கவும். இதில் கடைசிப் பகுதியைக் கவனிக்கவும். நாம் இந்த அப்பத்தில் புசித்து, பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தத்தை நினைவுகூருகிறோம்.*

*<u>7. ஒவ்வொரு உண்மையான விசுவாசியின் உள்ளத்திலும் அவரது வருகையைக் குறித்த வாக்குத்தத்தம் உண்டு</u>. வெளிப்படுத்தல் 19:10ஐ வாசிக்கவும். இதில் விசுவாசிகளான நமக்குள்ளேயுள்ள இயேசுவின் சாட்சியம் என்பது என்ன? இந்த இடத்திலே, முக்கியமாக இந்தச் சூழலில் இது அவரது இரண்டாம் வருகையைக் குறிப்பதாகும். சீக்கிரமாக நிகழவிருக்கும் அவரது வருகையைக் குறித்த எதிர்பார்ப்பையும், நிச்சயத்தையும் பரிசுத்தஆவியானவர் நமது இருதயங்களில் வைத்துள்ளார். அதனாலே நாம் 'ஆமென் ஆண்டவராகிய இயேசுவே வாரும்' என்று உரத்த குரலில் கூப்பிடத் தூண்டப்படுகி றோமல்லவா! வெளிப்படுத்தல் 22:20*

*தொடர் - 6 வேதாகம தீர்க்கதரிசனம்*

## *பாடம் 3 இரண்டாம் வருகை குறித்த தவறான கருத்துக்கள்*

*இரண்டாம் வருகை என்கிற சத்தியத்திற்குப் பலர் தவறாக விளக்கம் கொடுத்து வருகின்றனர். ஆகவே நாம் இதைப்பற்றி வேதாகமம் போதிப்பது என்னவெனத் தெளிவாகக் கண்டு கொள்ள வேண்டும். வேதாகமத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய வேதபகுதிகள் யாவும் எவ்வித முரண்பாடுமின்றி இசைவாகவுள்ளது. அவ் வசனங்கள் யாவும் அவர் இப்போது இருக்கிற மகிமையான சரீரத்தோடு நாம் காணும்படியாக எழுதப்பட்டபடியே திரும்ப வருவார் என்று தெளிவாகக் கூறுகின்றன. இந்த சத்தியம் பற்றிய விபரங்கள் பலவுண்டு. அவற்றையெல்லாம் நாம் ஒரு போதனையாக, கொள்கையாக மாற்றுவது புத்தியீனமாகும். அவர் வரப்போகிறார் (1தெசலோனிக்கேயர் 4:17). அவரது இரண்டாம் வருகையானது முதலாம் வருகையைப் போன்றே எழுதப்பட்டபடியே நிறைவேறும் (அப் 1:11). இது குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை. காரியங்கள் இப்படி இருப்பதினால், இக்காலத்தே நிலவும் முரண்பாடான. தவறான உபதேசங்களைக் களைந்தெறிவோம்.*

*யோவான் 14:1-3 படிக்கவும். 'நான் திரும்பவும் வருவேன்' என்று ஆண்டவர் கூறியுள்ளதின் அர்த்தம் என்ன?*

*1. அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரும் அனுபவிக்கும், அவரால் உறுதியளிக்கப்பட்ட, அவரது ஆவிக்குரிய பிரசன்னத்தை அவர் இங்கு குறிப்பிட வில்லை.*

*கிறிஸ்துவின் பிரசன்னத்தை வாக்குறுதியாகக் கொண்டிருப்பது அற்புதமானது. அதைவிட அற்புதம் அவரது பிரசன்னத்தை அனுபவிப்பதேயாகும். பழைய ஏற்பாட்டுப் பக்தர்களுக்கு ஆண்டவரின் பிரசன்னம் சங்கீதம் 23:4, ஏசாயா 43:2 இல் வாக்களிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். மத்தேயு 28:19,20 இல் நமது ஆண்டவர் பரத்திற்கேறும் முன்பு வாக்குத்தத்தம் செய்த ஆண்டவரின் பிரசன்னத்தைக் காணலாம். எபிரெயர் 13:5,6 இல் கூறப்பட்டுள்ள சத்தியம் உண்மையென நாம் உணர்ந்து ஆறுதலையும், உற்சாகத்தையும் அடைந்துவருவது சரியே. ஆயினும் நமது ஆண்டவர் நான் திரும்பவும் வருவேன் எனக் கூறியுள்ளது இதையல்ல. அவர் பரத்துக்கேறிச் செல்லும்போது அவரது சீடர்கள் அண்ணாந்து பார்த்துக்கொண்டு நின்றனர். அப்போது நடந்ததென்ன? அப்போஸ்தலர் 1:10,11 ஐப் படிக்கவும்.*

*2. தேவவரமாகிய வரப்போகின்ற பரிசுத்த ஆவியானவரைப் பற்றி ஆண்டவர் இங்கு குறிப்பிடவில்லை.*

*வரப்போகின்ற பரிசுத்த ஆவியானவரைக் குறித்து ஆண்டவர் இயேசு கூறிய வாக்குத்தத்தத்தை நாம் யோவான் 14:18 இல் காண்கிறோம். இந்த வாக்குத்தத்தம் பெந்தெகொஸ்தே நாளிலே பரத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தபோது நிறைவேறிற்று (அப்போஸ்தலர் 2:1-4) காத்திருந்த தமது சீடர்களிடம் ஆண்டவர் இயேசு, புதுமையான அற்புதமான வகையில் வந்தார். நான் திரும்ப வருவேன் என்று யோவான் 14:1-3 இல் அவரால் கூறப்பட்டதின் நிறைவேற்றம் இதுவல்ல. சற்று நிதானமாக யோசித்துப் பாருங்கள். பெந்தேகொஸ்தேக்குப் பின்னும்கூட அவரது இரண்டாம் வருகை குறித்து பலமுறை திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. ஆகவே பெந்தேகொஸ்தே அவரது வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் அல்ல. கர்த்தர்தாமே...இறங்கி வருவார் (1தெசலோனிக்கேயர் 4:16). கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறோம் (பி ப்பியர் 3:20) - பரிசுத்த ஆவியானவரல்ல.*

*3. மனமாற்றம் என்கிற அற்புதமான அனுபவத்தை அவர் இங்கு குறிப்பிடவில்லை.*

*நாம் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, மெய்யாகவே ஆண்டவர் நம்மிடம் வருகிறார் (யோவான் 1:12, கலாத்தியர் 2:20) இதை நாம் அவரது இரண்டாம் வருகையின் வாக்குத்தத்தத்தோடு (எபிரெயர் 9:28) இணைத்துக் குழப்பம் அடையக் கூடாது. 1தெசலோனிக்கேயர் 1:9,10ஐப் படியுங்கள். இதிலே கூறப்பட்டுள்ள தெசலோனிக்கேயின் விசுவாசிகள் மனமாற்றம் அடைந்தோர், ஆண்டவருக்கு ஊழியம் செய்வோர். அப்படியிருந்தும் அவர்கள் ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி யிருந்தனர். இங்கே கூறப்பட்ட வசனங்கள் மன மாற்றத்தைக் குறிப்பிடாமல், நிச்சயமான, ஆண்டவரின் வருகையைக் குறிப்பதாகவுள்ளது.*

*4. விசுவாசியின் மரணத்தை அவர் இங்கு குறிப்பிடவில்லை.*

*நாம் இருண்ட பள்ளத்தாக்கைக் குறித்தோ, மரணத்தைக் குறித்தோ பயப்படத் தேவையில்லை. ஏனெனில் மரணத்தை வென்ற ஆண்டவர் நம்மோடுகூட இருப்பார். நாமும்கூட தாவீதோடு இணைந்து சங்கீதம் 23:4ஐக் கூறலாமே. இருப்பினும் மரணம் நமது எதிரியே (1கொரிந்தியர் 15:26) நாம் மரணத்தின் மீது நம்பிக்கை வைக்காமல் ஆண்டவரின் வருகையில் நம்பிக்கை வைக்கிறோம்.*

*(தீத்து 2:11-13) யோவான் 21:21,22ஐப் படித்து வசனங்கள் 18,19 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். அப்பொழுது மரணத்திற்கும், இரண்டாம் வருகைக்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் காண்பீர்கள். மேலும் இரண்டாம் வருகை மரணத்தைக் குறிப்பிடாது. ஏனெனில் கிறிஸ்தவர்கள் பலர் மரணத்தை ருசி பார்ப்பதில்லை. (1கொரிந்தியர் 15:51,52; 1தெசலோனிக்கேயர் 4:17)*

*5. அவரது வெளிப்படையான சரீரப் பிரகாரமான வருகையுடன் தொடர் பில்லாத வரலாற்று நிகழ்வை அவர் இங்கு குறிப்பிடவில்லை.*

*எருசலேமின் அழிவின்போது (கி.பி. 70இல்) கிறிஸ்து வந்துவிட்டார் என்று சிலர் கூறினர். இக்கால கள்ள உபதேசக் கூட்டத்தாரில் ஒரு கூட்டத்தினர் அவர் கி.பி. 1844 இல் வந்துவிட்டார் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் அவர் 1914 இல் வந்து விட்டதாகப் போதிக்கின்றனர் (மத்தேயு 24:30ஐயும் 26:64யும் படிக்கவும்.*

*6. இந்த உலகில் படிப்படியான முன்னேற்றம் நேரிட்டு அவரது வருகைக்கு வழி வகுக்கும் என்பதை அவர் குறிப்பிடவில்லை.*

*கிறிஸதவம் பரம்புதல் என்பது படிப்படியானது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் வேதாகமம் கிறிஸ்துவின் வருகை எதிர்பாராத வகையில் சடுதியாக நேரிடும் என்று கூறுகிறது. மத்தேயு 24:27,36,42, 1தெசலோனிக்கேயர் 5:2 வெளிப்படுத்தல் 3:3 படிக்கவும்.*

*7. தம்முடைய மக்களில் சிலரை மட்டும் அழைத்துச் செல்வதற்கு வராமல் யாவரையும் அழைத்துச் செல்ல வருவதை இங்கு அவர் குறிப்பிடவில்லை.*

*1தெசலோனிக்கேயர் 4:16,17 இல் மரித்த பரிசுத்தவான்கள் யாவரும் எழும்புவர் என்றும், உயிரோடிருக்கும் நாமும் எடுத்துக் கொள்ளப் படுவோம் என்றும் கூறுகிறது. பகுதி பகுதியாக எடுத்துக் கொள்ளப்படுதல் பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை. 1கொரிந்தியர் 15:23ஐப் பார்க்கவும் (கடைசிப் பகுதியைப் பார்க்கவும்) மேலும் 1கொரிந்தியர் 15:51,52 இல் குறிப்பாக வசனம் 51 இல் நாமெல்லாரும் என்ற கடைசி வார்த்தையைப் பார்க்கவும். விசுவாசிகள் யாவரும் இணைந்த மணவாட்டிக்காகக் மணவாளன் வருகிறார். (எபேசியர் 5:22,23, மத்தேயு 25:6) மெய்யாகவே மறுபடியும் பிறந்த, இரத்தத்தால் மீட்கப்பட்ட கடவுளின் பிள்ளைகள் ஒவ்வொருவருக்காகவும் ஆண்டவர் திரும்ப வரப்போகிறார். யோவான் 14:3 இல் அவர் எதற்காக வருகிறார் என்று கூறியுள்ளார். நம்மை நமது பரலோக வீட்டிற்கு அழைத்துப் போக வருகிறார். ஆண்டவர் திரும்ப வந்து தம்மோடு ஏற்றுக்கொண்டு அழைத்துச் செல்ல நமக்குள்ளே தகுதியுள்ளவர்கள் யார்? இதற்குக் காரணம் அவரது கிருபையே! என்னே விந்தை!*

*அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்*

*எங்கள் இயேசுராஜன் வானில் தோன்றும் நாள்*

*அல்லேலூயா, அல்லேலூயா அல்லேலூயா*

*கஷ்ட நஷ்டம் பட்டபாடு பறந்துபோகுமே*

*பஞ்சம் பசி தாகமுமே மறைந்து போகுமே*

*வாதை நோய் துன்பமும் வருத்தங்கள் யாவுமே*

*நீங்குமே நீங்குமே நீங்குமே -- அந்த நாள்*

தொடர் - 6 வேதாகம தீர்க்கதரிசனம்

## பாடம் - 4 திருச்சபை எடுத்துக் கொள்ளப்படுதல்

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வரப்போகிறார். சீக்கிரமாகவே வருவார். இந்த மகிமையான சத்தியத்தைக் குறித்த வேத வாக்கியங்களின் சாட்சியைப் பற்றி நாம் இரண்டாம் பாடத்தில் படித்தோம். மூன்றாம் பாடத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய வாக்குத்தத்தம் தொடர்பான சில கருத்துக்களைப் படித்தோம். 2000 வருடங்கட்கு முன்னர் வந்த அதே ஆண்டவர் இயேசு, இரண்டாம் முறையாக திரும்ப வருவார் (எபிரெயர் 9:26,28). ஆனால் அவர் எப்படி வருவார்? எப்போது வருவார்? யாருக்காக வருவார்?

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிகழவிருக்கின்றது என்று வேதாகமம் கூறுவதைப் போதிக்கும்போது முக்கியமான ஒன்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதாவது இது இரண்டு கட்டங்களாக நடக்கும். மனுஷ குமாரன் வல்லமையோடு வந்து அரசாளுவார் என்று பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் யாவும் கூறுகின்றன. இரண்டு முக்கியமான புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் ஆண்டவரின் வருகையைப் பற்றி கூறுகின்றன. ஆண்டவர் பூமிக்குத் திரும்பும் முன்னர் (சகரியா 14:4) மனுஷ குமாரனாகிய (மத்தேயு 24:27,30) அவர் இஸ்ரவேலை விடுவித்து (சகரியா 14:3) யாவரும் காணும்படி (வெளிப்படுத்தல் 1:7) வெளிப்பட்டு தமது எதிரிகளைப் பழி வாங்குவார் (1தெசலோனிக்கேயர் 1:7,8). இவ்விதமாக அவர் வரும் முன்பு, நடுவானில் வந்து தம்முடைய பரிசுத்தவான்களைத் தம்மோடு அழைத்துச் செல்வார் (1தெசலோனிக்கேயர் 4:16,17). இவ்வாறு அவர் வல்லமையோடும் மகிமையோடும் வரும்முன்பு, அடையாளங்கள் பல தோன்றும். (மத்தேயு 24) ஆனால் அவர் தமது சபைக்கென வருவது எந்த நேரத்திலும் நடக்கலாம். இதையே 'திருச்சபை எடுத்துக் கொள்ளப்படல்' என்கிறோம். அவர் அப்படி வரும்போது தம்மோடு இருக்கும்படி தம்முடைய மக்களை எடுத்துச் செல்வார். இந்த முக்கியமான சத்தியத்தைக் கூறும் இரண்டு பகுதிகள் இவை:

1. 1தெசலோனிக்கேயர் 4:12-18
2. 1கொரிந்தியர் 15:51-53

1. 1தெசலோனிக்கேயர் 4:15 இல் கூறப்பட்டுள்ள 'கர்த்தருடைய வார்த்தையை' என்கிற முக்கியமான வார்த்தைகளைக் கவனிக்கவும். இதைப் பவுல் சொல்கிறார், அதாவது ஆண்டவர் அவருக்கு வெளிப்படுத்தினவற்றை எழுதுகிறார். இது பவுலின் கருத்து அல்ல என்பதைக் கவனிக்கவும்.

2. அதே போன்று 1கொரிந்தியர் 15:51 இல், 'இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்' என்று கூறப்பட்டுள்ள முக்கியமான வார்த்தைகளைக் கவனிக்கவும். பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படாத சத்தியத்தையே, புதிய ஏற்பாடு 'இரகசியம்' என்று கூறுகிறது. ஆரம்பித்தவர் களுக்கு மட்டும் தெரிந்ததே 'இரகசியம்' எனலாம். 'திருச்சபை எடுத்துக் கொள்ளப்படுதல்' என்கிற சத்தியத்தை வாக்களித்தவர் ஆண்டவராகிய இயேசு (யோவான் 14:3). ஆனால், இதை முழுமையாக வெளிப்படுத்தி, இதற்கு விளக்கம் தந்தவர் அப்போஸ்தலனாகிய பவுல்.

1கொரிந்தியர் 15:51-53 வரை சொல்லப்பட்ட போதனைகள் யாவற்றையும் 1தெசலோனிக்கேயர் 4:13-18 வரை கூறப்பட்ட பகுதிக்குள் காணலாம். ஆகவே நாம் நமது பாடத்திற்கு ஆதாரமாக தெசலோனிக்கேயர் பகுதியைக்கொண்டு ஆண்டவர் இயேசு தமது மக்களைத் தம்மோடு அழைத்துச் செல்ல வரும் போது என்ன நடக்கும் என ஆராயலாம்.

1. அவர் சரீரத்தோடு திரும்ப வருவார். 1தெசலோனிக்கேயர் 4:16இல் 'ஏனெனில் கர்த்தர்தாமே.....'என்றுள்ளது. வேறு இயேசு அல்ல, 'இந்த இயேசுவானவர்' (அப்போஸ்தலர் 1:11) என்று காண்கிறோம். இவர் மாறாதவர் (எபிரெயர் 13:8) ஆம். அதே மகிமையுள்ளவர். பூமியிலே அவர் வாழ்ந்த காலத்தே, அன்புள்ளவராகவும், கிருபையுள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும் வாழ்ந்தார். அந்த ஒருவரே கல்வாரிச் சிலுவையில் நமக்காக மரித்தவர். அந்த ஒருவரே நமக்காக மீண்டும் வரப்போகிறார். இயேசுவானவர் தாமே வரப்போகிறார்!

2. நடுவானில் அவர் தோன்றுவது சடுதியாக, எதிரபாராத வகையில் இருக்கும். 1தெசலோனிக்கேயர் 4:16 இல், 'ஆரவாரத்தோடும்... சத்தத்தோடும்... எக்காளத்தோடும்' வருவார் எனக் காண்கிறோம். இவற்றை 'உலகம்' கேட்குமா? என்ன நடக்கின்றதென்பதை அறிந்து கொள்ளுமா? நம்மால் சொல்ல முடியாது. (அப்போஸ்தலர் 22:9 ஒப்பிட்டுப் பார்க்க)ஆனால் விசுவாசிகள் ஒவ்வொருவரும் அதைக் கேட்பார்கள், என்ன நடக்கிற தென்பதை அறிந்து கொள்வார்கள் என்பது உறுதி! தெய்வீகத் தலையீடு என்பது எப்பொழுதும் சடுதியானது, பிரமாண்டமானதும்கூட. (பிரளயம், எகிப்தைவிட்டு வெளியேறுதல், பெந்தெகொஸ்தே - ஒப்பிட்டுப் பார்க்கவும்) நமது ஆண்டவர் பரத்திற்கு ஏறிப் போனதும் சடுதியாக நிகழ்ந்ததே! (மாற்கு 16:19) லூக்கா 24:51, அப்போஸ்தலர் 1:9) அவரது வருகையும் அப்படியே சடுதியாக நேரிடும்.

*3. அவர் இறங்கி வரும்போது, 'கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 1தெசலோனிக்கேயர் 4:16. மரித்தவர்கள் எல்லாரும் அல்ல, 'கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்', அதாவது விசுவாசிகள் மட்டுமே எழுந்திருப்பர். இதுவே 'முதலாம் உயிர்த்தெழுதல்'. கிறிஸ்து மரிப்பதற்கு முன்னர் இரட்சிக்கப் பட்டோரும், அதற்குப் பின்னர் இரட்சிக்கப்பட்டோர் யாவரும் மகிமையான சரீரத்தோடு மரணத்தைவிட்டு எழுந்திருப்பர். அவரது வருகை வரைக்கும் அவர்களது சரீரம் 'நித்திரையடைந்திருக்கும்' (1தெசலோனிக்கேயர் 4:13-15; 1கொரிந்தியர் 15:51) அவர் வரும்போது, கிறிஸ்துவிடம் உள்ள அவர்களது ஆவி (2கொரிந்தியர் 5:8, எபேசியர் 3:15, பிலிப்பியர் 1:23) அழிவில்லாத சரீரத்தை உடுத்திக் கொள்ளும (1கொரிந்தியர் 15:52)*

*4. உயிரோடிருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் மறுரூபமடைந்து, எடுத்துக் கொள்ளப்படுவர். 1தெசலோனிக்கேயர் 4:17, இதனையே 1கொரிந்தியர் 15:51 இல் 'நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை' என்று கூறப்பட்டுள்ளது. அவர்களது பூமிக்குரிய சரீரத்திற்குப் பதிலாக, புதிதான பரலோகத்திற்குரிய சரீரத்தைப் பெறுவார்கள் (1கொரிந்தியர் 15:35-49) இவை யாவும் 'ஒரு இமைப் பொழுதிலே' நடக்கும். உண்மையான ஒவ்வொரு விசுவாசியும் சடுதியாக ஆண்டவரின் பிரசன்னத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவர். உயிரோடிருக்கும் இலட்சோப இலட்ச கிறிஸ்தவர்கள் அவர் வருகையின் போது உலகிலிருந்து ஏனோக்கைப் போன்று (எபிரெயர் 11:5) எலியாவைப் போன்று (2இராஜாக்கள் 2:11) ஆண்டவர் இயேசுவைப் (அப்போஸ்தலர் 1:9) போன்று மறைந்து விடுவர்.*

*5. அதைத் தொடர்ந்து கடவுளின் பரிசுத்தவான்கள் யாவரும் மகிமையில் கூடிச் சேர்வர். 1தெசலோனிக்கேயர் 4:17 இல், 'அவர்களோடே கூட' என்கிற வார்த்தைகளைக் கவனிக்கவும். நாம் ஒருமித்துக் கூடி இருப்பது எவ்வளவு நலமானது! நம்முடையவர்களையும், எல்லாப் பரிசுத்தவான்களையும் அடையாளம் கண்டு சேர்ந்திருப்போம்.*

*6. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்டவரை நாம் சந்திப்போம். ஆகாயத்தில் அவரைச் சந்திப்போம். 1தெசலோனிக்கேயர் 4:17. எப்படிப்பட்ட சிலாக்கியம்! நம்முடைய ஆண்டவரை, நமது இரட்சகரைச் சந்திப்போம்!*

*7. 'இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.' 1தெசலோனிக்கேயர் 4:17. இதுவே நம் வாழ்வின் குறிக்கோள். (சங்கீதம் 23:6) சங்கீதம் 16:11, யோவான் 17:24 ஒப்பிட்டுப் பார்க்க.*

*இந்த ஆசீர்வாதமான எதிர்பார்ப்பு நமக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கிறது (1தெசலோனிக்கேயர் 4:18, தீத்து 2:13)! நமது ஆண்டவர் திரும்ப வந்து தமது பரிசுத்தவான்களைச் சேர்ந்த பின்பு, அவர் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வந்து இந்தப் பூமியை அரசாளுவார் (லூக்கா 1:32,33)*

வானில் காகளம் முழங்கிடவே

வாஞ்சையோடு பறந்திடுவோம்

இப்புவி துன்பங்கள் மறைந்திடுதே

இயேசுவின் இராச்சியம் நெருங்கிடுதே

*ஆ.......ஆமென் அல்லேலூயா*

ஆமென் வாரும் இயேசுவே

தொடர் - 6 வேதாகம தீர்க்கதரிசனம்

## பாடம் 5 அவரது வருகைக்குரிய அடையாளங்கள்

*கிறிஸ்தவனின் ஆசீர்வாதமான எதிர்பார்ப்பாகிய கிறிஸ்துவின் வருகையை பற்றிக் கடந்த பாடத்திலே நாம் படித்தோம். முதலாவதாக அவர் தம்முடையவர்களுக்கென நடுவானிலே தோன்றுவார்(1தெசலோனிக்கேயர் 4:17). அதன் பின்னர் அவர் தம்முடையவர்களோடு இப்பூமிக்குத் திரும்புவார். (யூதா 14, சகரியா 14:4, அப்போஸ்தலர் 1:11). அவர் எப்பொழுது வருவார் எனக் கண்டறிய ஏதாகிலும் வழி உண்டா? அவரது வருகை நேரிடும் நாளையும், நேரத்தையும் குறிப்பாகக் கணித்துக் கூறுவது மதியீனமாயிருக்கும். (சகரியா 14:7, மத்தேயு 24:36, மாற்கு 13:32, அப்போஸ்தலர் 1:6,7). ஆயினும் கடவுளின் வார்த்தை, அவரது வருகைக்குரிய அடையாளங்களைக் குறிப்பாகக் கூறியுள்ளது. அதன்மூலம் நாம் முடிவு காலத்தை நெருங்கி வருகிறோம் என்று காணமுடிகிறது - லூக்கா 21:28 பார்க்க. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களும், ஆண்டவர் இயேசுவும், அப்போஸ்தலரும் அவருடைய இரண்டாம் வருகைக்குரிய முன்னடையாளமாக உலகிலும், சபையிலும் நேரிடும் சில நிகழ்வுகளைக் குறிப்பிட்டுள்ளனர். மேசியாவாகிய இயேசுவின் முதலாம் வருகைக்கு அடையாளமாக யோவான் ஸ்நானன் தோற்றம் (ஏசாயா 40:3) குறிப்பிடப்பட்டிருந்தது. அதே போன்று இன்று திருச் சபையிலும், உலகிலும் நாம் காணக்கூடிய சில உறுதியான அடையாளங்கள், அவரது இரண்டாம் வருகை நெருங்குகிறது என்பதைக் கட்டியங் கூறுகின்றன.*

*கிறிஸ்து வருகையின் முதற்கட்டமான 'விசுவாசிகள்(திருச்சபை) எடுத்துக் கொள்ளப் படுவது' குறித்து எவ்வித 'அடையாளமும். கொடுக்கப்படவில்லை என்று உறுதியாகக் கூறலாம். ஆண்டவர் தம்முடைய பரிசுத்தவான்களுக்கென நடுவானில் தோன்றுவார் என்பது, சடுதியாக நேரிடும் என்பது திருச்சபையின் எதிர்பார்ப்பு (பிலிப்பியர் 3:20, 1தெசலோனிக்கேயர் 1:10). அடையாளங்கள் யாவும் மனித குமாரன் வல்லமையோடும் மகிமையோடும் வந்து அரசாளுவார் என்பதை மட்டுமே கூறுகின்றன. இதைப் பார்க்கும்போது, ஆண்டவர் தம்முடைய மக்களோடு இவ்வுலகிற்கு வரும்முன்பு, அவர் தமது மக்களுக்கென வருவது நேரிடும் எனக் காண்கிறோம். அவரது மகிமையோடு வருவதற்கான அடையாளங்கள் நம் கண்முன்னே உருவாவதைக் காணும்போது, அவரது வருகை சமீபமாயிருக்கிறது எனவும், அவரது சபை எடுத்துக் கொள்ளப்படும் காலம் சமீபமாயுள்ளது எனவும் நாம் அறிய வேண்டும்.*

*நாம் வேதாகமத்தை எடுத்து, கீழே பட்டியலிட்டுள்ள வசனங்களைக் கவனமாகப் படிப்போமாகில் 1. உலகிலுள்ள அடையாளங்கள், 2. சபையில் உள்ள அடையாளங்கள், 3. யூதருக்குள் நடக்கும் அடையாளங்கள் யாவும் ஆண்டவர் வாசலருகே வந்துவிட்டார் என்பதைப் பறைசாற்றும்.*

### *1. உலகிலுள்ள அடையாளங்கள்*

*1. நோவாவின் காலத்திலும், லோத்தின் காலத்திலும் நடந்தது போல, பாவமும், துன்மார்க்கமும் பெருகும். 2தீமோத்தேயு 3:1-5, லூக்கா 17:26 - 30, ஆதியாகமம் 6:11*

*2. ஜனங்களுக்கு இடுக்கண், தத்தளிப்பு, பயம் போன்றவை நேரிடும். - லூக்கா 21:25,26, குறிப்பாக அணுகுண்டு குறித்த பயம் வரும். மத்தேயு 24:3-6 2பேதுரு 3:10.*

*3. பஞ்சம், கொள்ளைநோய், பூமி அதிர்ச்சிகள் வரும் - மத்தேயு 24:7*

*4. தொழிலாளர் பிரச்சனைகள், வேலை நிறுத்தங்கள், வியாபாரம், தொழிற்சாலைகளில் குழப்பம் நேரிடும் - சகரியா 8:10, யாக்கோபு 5:4*

*5. பயணங்களும், அறிவும் பெருகும்- தானியேல் 12:4, நாகூம் 2:3,4 ஏசாயா 31:5, 60:8.*

*6. செல்வத்தைப் பெருக்குவர் - யாக்கோபு 5:1-3*

*7.சமாதானம் குறித்து அதிகம் பேசுவர், சமாதானக் கூட்டங்கள் நடத்துவர் 1தெசலோனிக்கேயர் 5:1-3*

*மேலே கூறப்பட்ட அடையாளங்கள், இன்று நம் கண்ணெதிரே நடக்கின்ற தல்லவா! உலகில் இன்று நடக்கும் இந்த அடையாளங்கள் யாவும் ஆண்டவரின் வருகை மிகவும் சமீபம் என்று கூறவில்லையா?*

*2. சபையில் நடக்கும் அடையாளங்கள்*

*1. கள்ள உபதேசங்கள் பெருகும்: 2தெசலோனிக்கேயர்2:3, 1தீமோத்தேயு4:1, 2தீமோத்தேயு3:34*

*2. மாய்மாலம், பாசாங்கு பெருகும் - 2தீமோத்தேயு 3:5*

*3. அனலற்ற சபைகள் தோன்றும் - மத்தேயு 24:12, வெளிப்படுத்தல் 3:14-20*

*4. சத்தியத்தைப் பரிகாசம் செய்யும் பலர் எழும்புவர் - 2பேதுரு 3:3,4*

*5. கள்ளத் தீர்க்கதரிசிகள், கள்ளச் சபைகள், சபைப் பிரிவுகள் தோன்றும் - மத்தேயு 24:11 1தீமோத்தேயு 4:1,2 2தீமோத்தேயு 4:3-4, 2தெசலோனிக்கேயர் 2:7-10, 2பேதுரு 2:1,2*

*6. உண்மையானவர்களுக்கு உபத்திரவம் வரும் - மத்தேயு 24:9,10, மாற்கு 13:913*

*7. உலகம் முழுவதும் அருட்பணி நடக்கும் - மாற்கு 13:10*

*இந்த அடையாளங்கள் யாவும் இன்று சபையில் உள்ளன என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்களா? சபையில் உள்ள இந்த அடையாளங்கள் யாவும் ஆண்டவரின் வருகை சமீபம் என்று உரைக்கவில்லையா?*

*3. யூதருடைய அடையாளங்கள்.*

*முதலில் லூக்கா 21:29-33 வரை படியுங்கள். இந்தப் பகுதியில் நமது ஆண்டவர் யூத இனத்தை அத்தி மரத்துடன் ஒப்பிட்டுக் கூறுகிறார். அத்தி மரம் துளிர்விட்டு கனி கொடுப்பது போன்று அவரது வருகை சமீபம் என்று உறுதிப்படுத்துகிறது. அத்திமரம் துளிர்விடுவது இன்று நடைபெறுகிறது.*

*கடந்த முப்பது ஆண்டுகட்கு மேலாக யூதர்கள் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பி வருவது, தீர்க்கதரிசனங்கள் பலவற்றின் நிறைவேற்றம் எனலாம். - ஏசாயா 11:11,12, எசேக்கியேல் 36:24, 37:21, எரேமியா 23:3-8, 32:37-41, ஆமோஸ் 9:14,15, லூக்கா 21:24*

*இஸ்ரவேல் நாட்டிலே, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து, யூதர்கள் கூடிச் சேர்வர். ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாதமும் கப்பல் மூலம், விமானம் மூலம் ஆபிரகாமின் குமாரரும், குமாரத்திகளும், இஸ்ரவேலின் துறைகளில் வந்து கூடுவர்.*

*தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டபடி இஸ்ரவேலில் தொழிற்சாலைகள், விவசாயம், பண்பாடு போன்றவை மேம்பட்டு நிறைவேறும். ஏசாயா 35:1-10, எரேமியா 30:18-22, 31:7-14, சகரியா 14:9-11, ஓசியா 3:4,5.*

*யூதருடைய இந்த அடையாளங்கள் யாவும் ஆண்டவரின் வருகை மிகச் சமீபம் என்று வெளிப்படுத்துகிறது.*

*இந்த வேத வசனங்களைப் படித்து, தியானிக்கும்போது, நிகழ்காலத்தே வாழும் நாம் கடைசி காலத்தின் விளிம்பில் நிற்கிறோம் என்றும், ஆண்டவரின் வருகை மிகச் சமீபத்திலுள்ளதென்றும் நம்பி, நியாயப்படுத்த ஏதுவாகின்றதல்லவா! (யாக்கோபு 5:8) இந்தச் சத்தியம் மகிமையானதும், உறுதியானதுமல்லவா! இது ஆர்வத்தோடு எதிர்நோக்கும் ஒன்று! இது அவரை ஆண்டவராகவும், இரட்சகராக வும் ஏற்றுக்கொண்டு, அவரை நம்புகிற யாவருக்கும் மகிமையுள்ளதாகும். ஆனால் அவரை ஏற்றுக் கொள்ளாத மக்களுக்கும், மனந்திரும்பி, விசுவாசத்தோடு அவரிடம் திரும்பாதோருக்கும் மிகவும் பயங்கரமானதாகும். ஏசாயா 55:6,7 வசனங்களைப் படித்து இந்தப் பாடத்தை முடிப்போமா!*

## பாடம் 6 கிறிஸ்துவின் நியாயாசனம்

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் எவரையும் அந்த நிமிடத்திலேயே கடவுள் இரட்சிக்கிறார். (அப்போஸ்தலர் 16:30,31, ரோமர் 10:9,10) இரட்சிக்கப்படுவதற்கு நாம் ஒருவரும் தகுதியுள்ளோரல்ல. இரட்சிப்பைப் பெற ஒருவரும் விலை கொடுக்க முடியாது. அதற்குரிய அருகதையும் நம்மிடமில்லை. இரட்சிப்பு முழுக்க முழுக்க கிருபையினால் மட்டுமே கிட்டுவதாகும். (எபேசியர் 2:8-10, தீத்து 3:5) இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கு முழுமையாக, இலவசமாக அருளப்படுவது. அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவரை மட்டுமே நம்புவோர் யாவருக்கும் இது கிட்டும். ஆகவே இரட்சிப்பு முற்றும் கிருபையினால் மட்டுமே கிட்டுவது. ஆண்டவர் திரும்பவும் வரும்போது, ஒவ்வொரு கிறிஸ்தவனும் மறுரூபமடைந்து, அவரோடு அவரது பிரசன்னத்தில் என்றென்றும் வாழுவான். (1தெசலோனிக்கேயர் 4:17,18) ஆனால் கிறிஸ்தவர்களில் உண்மையுள்ளோர் உண்மையில்லாதவர்கள் என்ற வேறுபாடு உண்டு (மத்தேயு 25:21) ஆவிக்குரியவர்கள், உலகத்திற்குரியோர் (1கொரிந்தியர் 3:1) எனவும், விழிப்புடன் இருப்போர், கவலையீனமாயிருப்போர் (எபேசியர் 5:15-17 என்றும் வேறுபடுவர். இதனாலென்ன? நாம் எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாகயிருந்தாலும் ஆண்டவர் மீண்டும் வரும்போது, நாமும் எடுத்துக் கொள்ளப்படுவோமா? அதிலும் வேறுபாடு உண்டு. 'நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். (2கொரிந்தியர் 5:10) அப்பொழுது நமக்குரிய பரிசு கிட்டும் (1கொரிந்தியர் 3:14) அல்லது நாம் நஷ்டமடைவோம். (1கொரிந்தியர் 3:15) நாம் எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக வாழ்கிறோமோ அதற்கேற்றபடி பலனடைவோம்.

கிறிஸ்தவனே, பெரிய தேர்வு நாள் நெருங்குகிறது. 'நமது செய்கைகளின் பூரண பலனைப் பெறும்படி' அந்த நாளை மனதிற்கொண்டு (2யோவான் 8) வாழவும், செயல்படவும் வேண்டும். நாம் எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக வாழ்கின்றோமோ அதற்கேற்ப வேறுபாட்டைக் காணலாம். எந்த விசுவாசியும் அவனது பாவத்திற்கென தண்டிக்கப்படுவதில்லை. ஏனெனில் ஒவ்வொரு விசுவாசியின் பாவத்திற்கென ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, கல்வாரி சிலுவையில் நியாயந் தீர்க்கப்பட்டு தண்டிக்கப்பட்டு விட்டாரே(யோவான் 5:24). இருப்பினும் நமது வாழ்க்கைக்கும், ஊழியத்திற்குமுரிய பலனை அடைய வேண்டாமோ! இதைக் குறித்து நாம் இப்பாடத்தில் படிக்கலாம்.

<u>1. நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் தோன்றும்போது எதையும் மறைக்க முடியாது!</u> இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் உண்மையில் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிய முடியாது. கடவுள் மட்டுமே நம் இருதயத்தை அறிய முடியும் (1சாமுவேல் 16:7). இப்பொழுது 2கொரிந்தியர் 5:10ஐப் படியுங்கள். இதை, 'கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம் முகமூடியில்லாமல் வெளிப்பட வேண்டும் அல்லது 'நமது உண்மையான குணத்தோடு வெளிப்பட வேண்டும்' என்றும் மொழிபெயர்க்கலாம். இதற்குத் தொடர்பாக அப்போஸ்தலர் 5:1-10 வரை படிக்கவும். அதன்பின் 1கொரிந்தியர் 3:13-15 வரைப் படிக்கவும். நாம் ஆண்டவருக்கென எப்படிப்பட்ட வேலை செய்தோம் என்பதை தோற்றத்தின்படி பாராமல் அக்கினியால் சோதிக்கப்படுவோம். 1கொரிந்தியர் 4:5 இல் கடவுள் முன்பாக நமது உண்மையான குணம் மட்டுமே எடைபோடப்படும் எனவும், கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நமது இருதயங்களின் யோசனைகள் யாவும் வெளிப்பட்டு அதற்குரிய பரிசு அளிக்கப்படும் எனவும் காண்கிறோம்.

<u>2. நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நிற்கும்போது, நாம் நம்மைக் குறித்தும், நமது ஊழியத்தைக் குறித்தும் கணக்கொப்புவிக்க வேண்டும்.</u> ரோமர் 14:12 இல் இதைக் காணலாம். இதில் எவருக்கும் விதிவிலக்கு இல்லை. 'ஒவ்வொருவரும்' என்று பவுல் கூறுகிறார். 'தன்னைக் குறித்து' கணக்கொப்புவிக்க வேண்டும். பிறரைக் குறித்தல்ல என்பதைக் கவனிக்கவும். அப்பொழுது இவைகள் வெளிப்படும்.

1. நாம் தேவ மகிமைக்காக வாழ்ந்தோமா? சுய நிறைவுக்காகவா? (2கொரிந்தியர் 5:15)

2. நம்முடைய நேரத்தை எவ்வாறு பயன்படுத்தினோம்? எபேசியர் 5:16, 1பேதுரு 1:17)

3. நமது பணம், உடைமை, செல்வம் போன்றவற்றை எதற்குப் பயன்படுத்தினோம்? (மத்தேயு 6:19-21, 1தீமோத்தேயு 6:17-19

4. இழந்துபோனமக்களுக்கு இரட்சிப்பைத் தேடினோமா?(தானியேல் 12:3;2கொரிந்தியர் 5:11)

5. ஜெபிப்பதில் உண்மையாயிருந்தோமா? (லூக்கா 18:1)

6. நாம் பேசின எல்லா வார்த்தைகளுக்காகவும் (மத்தேயு 12:36)

*7. சகோதரர் குறித்த நமது கருத்து (ரோமர் 12:10, 14:10, கலாத்தியர் 6:1)*

*8. நமது வேலையைக் குறித்த கணக்கொப்புவிக்க வேண்டும் (1கொரிந்தியர் 3:13)*

***<u>3. நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நிற்கும்போது, பயனற்றதும், வெறுமையான துமான யாவும் சுட்டெரிக்கப்படும்.</u>*** *அக்கினிப் பரீட்சைக்குத் தாக்குப் பிடிப்பவை மட்டுமே மிஞ்சும். 1கொரிந்தியர் 3:12-15 வரை படிக்கவும். அதில் கூறப்பட்டுள்ள இரண்டு வகை பொருட்களைக் கவனிக்கவும்.*

*1. அக்கினிப் பரீட்சைக்குத் தாக்குப்பிடிக்கும் பொருட்கள் அக்கினியால் சுத்திகரிக்கப்படும் (தங்கம், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்)*

*2. எளிதில் தீப்பற்றக் கூடியவை - பயனற்றவை (மரம், புல், வைக்கோல்)*

*நாம் வாழும் வாழ்க்கையும், நமது ஊழியமும் இந்த இரண்டில் ஏதாவது ஒரு வகையைச் சார்ந்ததாயிருக்கிறது - அது அக்கினிப் பரீட்சைக்கு தாக்குப் பிடிக்கும் அல்லது சுட்டெரிக்கப்படும்!*

***<u>4. நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நிற்கும்போது, உண்மையற்றவர்களைத் தண்டிப்பது நீதிபதியின் நோக்கம் அல்ல, உண்மையுள்ள மக்களுக்கு பரிசளிப்பதே அவரது நோக்கமாகும்.</u>*** *கிரேக்க நாட்டு விளையாட்டுப் போட்டிகள் முடிந்த பின்னர், வெற்றி பெற்ற போட்டியாளர் நீதிபதியின் முன்பு கூடி வருவர். உயரமான ஒரு மேடையின் மேல் நடுவர் அமர்ந்து, போட்டியின் முடிவுகளை அறிவித்து பரிசுகளை அளிப்பார். அவர் நமக்கு மதிப்பையும் உயர்வையும் பரிசையும் நமது தகுதிக்கேற்ப அளிக்கும்படி கிறிஸ்துவானவர் நியாயாசனத்தில் வீற்றிருப்பார். நீங்களும், நானும் அவருக்கு முன்பாக நிற்போம். பள்ளியில் நடைபெறும் பரிசளிப்பு விழாக்கள் நன்றாகச் செய்யாதவர்களைத் தண்டித்து, இழிவுபடுத்துவதற்காக அல்ல. நன்றாகச் செய்தவர்களுக்குப் பரிசளிப்பதற்காகத்தான். நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நின்று நம்முடைய பரிசைப் பெறுவதற்காக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் (1கொரிந்தியர் 3:14) நாம் சாட்சியாக வாழ்ந்து, ஊழியம் செய்ய வேண்டியது எவ்வளவு முக்கியமானது!*

*1. சிலர் தெய்வீக பாராட்டைப் பெறுவர் (மத்தேயு 25:21-23)*

*2. சிலருக்கு உயர் பதவி கொடுக்கப்படும் (லூக்கா 19:17-19, ரோமர் 15:10, வெளிப்படுத்தல் 20:4)*

*3. நாம் யாவரும் கிரீடங்களைப் பெறலாம். அவை எப்படிப்பட்ட கிரீடங்களெனப் பார்க்கலாம். கட்டுப்பாடுள்ள வாழ்க்கை நடத்தும் மக்களுக்கு அழிவில்லாத கிரீடம் (1கொரிந்தியர் 9:25) கிட்டும். சோதனையைச் சகிக்கும் மக்களுக்கு ஜீவகிரீடம் (யாக்கோபு 1:12) கிட்டும். ஆத்தும ஆதாயம் செய்யும் மக்களுக்கு மகிழ்ச்சியின் கிரீடம் (1தெசலோனிக்கேயர் 2:19,20) கிட்டும். மந்தையை நன்கு மேய்க்கும் மேயப்பருக்குக் கிட்டுவது மகிமையுள்ள வாடாத கிரீடம் (1பேதுரு 5:2-4) அவரது பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் கிட்டுவது நீதியின் கிரீடம் (2தீமோத்தேயு 4:8)*

***<u>5. நாம் கிறிஸ்துவின் நியாயாயசனத்திற்கு முன் நிற்கும்போது நம்முடைய சாட்சியிலும், ஊழியத்திலும் நான் இன்னமும் அதிகமாக ஆர்வமும், கவனமும், உண்மையுமாக இருந்திருக்கலாமே என்று நினைப்பது காலங்கடந்த செயலாகிவிடும்.</u>*** *ஆகவே இப்பொழுதே நாம் அவற்றைச் செய்ய வேண்டும். (1கொரிந்தியர் 11:31, 1யோவான் 2:28)*

## பாடம் 7 மகா பெரிய உபத்திரவகாலம்

முன் எப்போதும் நிகழ்ந்திராத போர், துன்பம், வேதனை போன்றவை நேரிடும் ஒரு காலத்தை நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். இக்காலத்தைப் 'பெரிய உபத்திரவ காலம்' (மத்தேயு 24:21,22,29,30, மாற்கு 13:24, வெளிப்படுத்தல் 7:14) 'யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்' (எரேமியா 30:7, தானியேல் 12:1) 'கர்த்தருடைய நாள்' (ஏசாயா 13:9, யோவேல் 2:1, ஆமோஸ் 5:18,20, செப்பனியா 1:14-18, 2தெசலோனிக்கேயர் 2:2, வெளிப்படுத்தல் 6:12-17) 'தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாள்' (ஏசாயா 61:2) என்று வேதம் கூறியுள்ளது. உலக வரலாற்றிலே மிகவும் இருண்ட காலம் இதுவாகத்தான் இருக்கும். அசீரியரின் கொடுமைகள், எருசலேமின் பயங்கரமான முற்றுகைகள், நெப்போலியன் நடப்பித்த கொடூரங்கள், கி.பி. 1914-1918 வரை நடந்த இரத்தம் சிந்துதல்கள், நாஜீ ஆளுகையில் நடப்பித்த அடாத செயல்கள் போன்றவற்றைப் பெரிய உபத்திரவகாலத்தோடு ஒப்பிடும் போது இவை யாவும் ஒன்றுமில்லாமற் போய் மறந்து போய்விடும். ஆயிர வருட ஆட்சி எனும் விடியற் காலத்திற்கு முன் தோன்றும் காரிருள் சூழ்ந்த இரவு இது. இந்தப் பெரிய உபத்திரவகாலம் கடந்து போன பின்பு, ஆண்டவர் திரும்பி வந்து தமது மகிமையுள்ள ஆட்சியைத் தொடருவார். இதுவே பூமியின் பொற்காலமாகும்.!

இந்தப் 'பெரிய உபத்திரவ காலத்தை' பல்வேறு வேதவசனங்கள் குறிப்பிட்டுள்ளன. பிடிவாதமாக இக்காலத்தைக் குறித்த விபரங்களை அறியாமலிருப்பதுச் சிக்கலான செயலாகும். எனினும் உபத்திரவகாலம் உண்டென்பதைக் குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை.

1. வேதாகமம் 'அந்திக் கிறிஸ்து' என்று குறிப்பிடும் ஒரு மிகவும் வல்லமையுள்ள வஞ்சகன் தோன்றும் போது பெரிய உபத்திரவகாலம் ஆரம்பம் என்று அறியலாம். இவன் உலகம் ஒருபோதும் கண்டிராத, வல்லமையுள்ள போர்வீரன், அரசியல்வாதி, ஆன்மீகத் தலைவனாக இருப்பான் (எசேக்கியேல் 28:3-7) இவனைப்பற்றிக் கூறும் பிற வேத பகுதிகள் - தானியேல் 7:2-27, 9:25-27, 11:36-12:3, 2தெசலோனிக்கேயர் 2:1-12, 1யோவான் 2:18-22, 4:3, 2யோவான் 7, வெளிப்படுத்தல் 13:11-18, 19:20. இந்த பயங்கரமான மனிதன் தற்போது இவ்வுலகில் தோன்றியிருக்கலாம். இவன் 'கேட்டின் மகனாகிய பாவமனுஷன்' (2தெசலோனிக்கேயர் 2:3) 'அக்கிரமக்காரன்' (2தெசலோனிக்கேயர் 2:8) என்று அழைக்கப்படுகிறான். தானியேல் தீர்க்கதரிசி அவனை, 'அவமதிக்கப்பட்டவன்' (தானியேல் 11:21) எனக் குறிப்பிட்டுள்ளார். இவன் சாத்தானால் சக்தியளிக்கப்பட்ட பிசாசினால் உருவாக்கப்பட்ட போலிக் கிறிஸ்து. கிறிஸ்துவுக்கும் இவனுக்குமுள்ள 7 வேறுபாடுகளைக் கவனிக்கவும்.

| ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து | அந்திக்கிறிஸ்து |
|---|---|
| 1. தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:8) | தன்னை உயர்த்துகிறவன் (2தெசலோனிக்கேயர் 2:4) |
| 2. ஊழியம்செய்ய, இரட்சிக்க வந்தார் (மத்தேயு 18:11) | ஆளவும், அழிக்கவும் வருவான் (தானியேல் 11:39) |
| 3. பிதாவின் சித்தம் செய்ய வந்தார் (யோவான் 4:34) | தன் விருப்பப்படி செய்ய வருவான் (தானியேல் 11:36) |
| 4. ஆட்டுக்குட்டியும், சிங்கமுமானவர் (வெளிப்படுத்தல் 5:5,6) | ஆட்டுக்குட்டியும் வலுசர்ப்பமுமானவன் (வெளிப்படுத்தல் 13:11) |
| 5. மணவாட்டியை உடையவர் (வெளிப்படுத்தல் 21:9) | மணவாட்டியும் உண்டு (வெளிப்படுத்தல் 17) |
| 6. தேவனாயிருந்தார், இருக்கிறார் (யோவான் 1:1) | தேவன்போலக் காட்டுவான் (2தெசலோனிக்கேயர் 2:4) |
| 7. பிதாவை உயர்த்தினார் (யோவான் 14:28) | தேவனை தூஷிப்பான் (வெளிப்படுத்தல் 13:6) |

*அந்திக் கிறிஸ்துவின் உடன் ஊழியன் கள்ளத் தீர்க்கதரிசியாகும். (வெளிப்படுத்தல் 13:11-18, 19:20) இவனே இராணுவத்தையும் (வெளிப்படுத்தல் 13:4) உலக வாணிகத்தையும் (வெளிப்படுத்தல் 13:17) ஆராதனையையும் (வெளிப்படுத்தல் 13:15) தன் கட்டுக்குள் வைத்திருப்பான். தன்னைக் கடவுள் என்று கூறுவான் (2தெசலோனிக்கேயர் 2:4)*

*2. பெரிய உபத்திரவ காலத்தின் ஆரம்பத்திலே, அந்திக்கிறிஸ்து யூதர்களோடு ஒரு உடன்படிக்கைச் செய்வான். அவன் பாழாக்குகிற அருவருப்பைத் தேவாலயத்தில் கொண்டுவந்து நிறுத்தி யாவரும் அதை ஆராதிக்கக் கூறி உடன்படிக்கையை மீறுவான். தானியேல் 9:27 ஐப் படித்து, மத்தேயு 24:15 இல் ஆண்டவர் கூறியவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்க. இப்பொழுது 2தெசலோனிக்கேயர் 2:4, வெளிப்படுத்தல் 12:12, 13:4 படிக்க. முதலில் அந்திக்கிறிஸ்துவின் உண்மையான குணம் வெளிப்படாது. அவன் யூதரோடு செய்த உடன்படிக்கையை மீறும்போது தான், அவன் பொல்லாதவன் என்பதும், வஞ்சகன் என்பதும் வெளிப்படும். அப்பொழுது உலக முழுவதும் போர் மூளும். (மத்தேயு 24:6, வெளிப்படுத்தல் 6:4, 16:12-16) பஞ்சங்கள், கொள்ளைநோய்கள், மரணம் (மத்தேயு 24:7, 21,22, வெளிப்படுத்தல் 6:5-8) பூமியதிர்ச்சிகள் மற்றும் பயங்கரமான தண்டனைகள் (மாற்கு 13:24,25, லூக்கா 21:11,25,26, வெளிப்படுத்தல் 6:12-17, 16:1-11) நேரிடும்.*

*3. பெரிய உபத்திரவ காலத்திலே, யூதர்கள் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பர். அநேகர் இரட்சிக்கப்படுவர். ஆனால் அவர்கள் கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசத்திற்கென கொடுமையாகத் துன்புறுத்தப்படுவர். இரத்த சாட்சியாகவும் மரிப்பர். திருச்சபையின் காலம் முடிவுற்று மீட்கப்பட்ட யாவரும் 'எடுத்துக் கொள்ளப்பட்டு' (1தெசலோனிக்கேயர் 4:16,17) ஆண்டவரோடு பரலோகில் இருக்கும்போது, எண்ணற்ற மக்கள் இரட்சிக்கப்படுவர் என்பதை அறியும்போது அது எவ்வளவு ஆறுதலாயிருக்கிறது?*

*இவர்கள் பாடுகட்குள் செல்லவேண்டும். அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் வரவில்லை. ஆயினும் அவர்கள் அவரது சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே சேவிப்பார்கள் (வெளிப்படுத்தல் 7:15) உபத்திரவ காலத்தின்போது, இராஜ்யத்தின் சுவிசேஷம் யெகோவாவிற்கு உண்மையுள்ள சாட்சிகளாக இருக்கும் யூதர்கள் மூலம் பிரசங்கிக்கப்படும் (ஏசாயா 43:10,12) தேவன் பேரிலுள்ள விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்ட மக்கள் அந்திக்கிறிஸ்துவை வணங்கவும், மிருகத்தை ஆராதிக்கவும் மறுப்பர். இதற்கென அவர்கள் பாடுபடவும், இரத்த சாட்சியாக மரிக்கவும் வேண்டும். (வெளிப்படுத்தல் 6:9-11, 13:15-18)*

*4. இந்தப் பெரிய உபத்திரவம் எருசலேமுக்கு அருகே ஆர்மெகதோன் போரில் உச்ச நிலையை அடையும்போது கிறிஸ்து வந்து போராடி வெற்றி வாகை சூடுவார். உலக வரலாற்றிலேயே இதுவே கம்பீரமான, பயங்கரமான வேளை. இதுவே பிரமாண்டமான போர் - சகரியா 14:1-8 பார்க்கவும். கிறிஸ்துதாமே வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் திரும்பி வருவார். அவர் தமது எதிரிகளை முறியடித்துத் தமது ஆயிர வருட ஆட்சியை நிறுவுவார். (சகரியா 14:9,16, வெளிப்படுத்தல் 19:16)*

*5. திருச்சபை உபத்திரவ காலத்திற்குள் செல்லும் என்று நான் நம்புவதில்லை. இதற் குரிய காரணத்தை நாம் அடுத்த பாடத்தில் படிக்கலாம். பூமியின் மேல் வரவிருக்கும் இந்தக் காலத்திற்கு நாம் தப்பவேண்டியது எவ்வளவு முக்கியமானது (ஏசாயா 55:7) அப்படி நடக்கும்போதுதான் நாம் இரட்சிக்கப்படாத மக்களை வரப் போகின்ற கோபாக்கினைக்குத் தப்பிக்கொள்ளும்படி எச்சரிக்க இயலும் (மத்தேயு 3:7)!.*

## பாடம் 8 திருச்சபையும் உபத்திரவ காலமும்

வேதாகமத்தில் முன்னுரைக்கப்பட்ட பெரிய உபத்திரவ காலத்தைக் குறித்து, கடந்த பாடத்தில் படித்தோம். கடவுளின் தண்டனை பூமியின்மீது இறங்கி வரும்போது அது ஒப்பிடமுடியாத அளவுக்குத் துன்பம் நிறைந்ததாக இருக்கும். இந்தக் கொடிய காலம் முன்னாக வரும்போது திருச்சபை எங்கே இருக்கும்? கொடிய உபத்திரவ காலம் ஆரம்பமாகும் முன்பு திருச்சபை பூமியிலிருந்து எடுக்கப்படும் யோவான் 14:3 இன்படி இயேசுவானவர் தம்மோடு கூட இருக்கும்படி தம்முடையவர்களைச் சேர்த்துக் கொள்ளுவார். இதை நம்புவதற்கு ஆதாரங்கள் எவை?

1. திருச்சபை அழைக்கப்பட்டவிதம், தெரிந்து கொள்ளப்பட்ட வகை, தெய்வீகத் திட்டத்தில் அதற்குரிய இடம், கிறிஸ்துவுடனுள்ள உறவு போன்ற சபையின் தன்மைகளைப் பார்க்கும்போது, திருச்சபை பெரிய உபத்திரவ காலத்திற்குள் போகவே போகாதென நிச்சயமாகக் கூறலாம். வானத்தின் கீழேயுள்ள புறஜாதியாரில், ஒவ்வொரு இனத்தாரி லிருந்தும், யூதரிலிருந்தும் ‘அழைக்கப்பட்டு‘, சேர்க்கப்பட்ட ஒரு கூட்டம் விசுவாசிகளே திருச்சபையாகும். அப்போஸ்தலர் 15:14 பார்க்கவும். தெய்வீகத் திட்டத்தில் சபைக்குரிய இடம் இடைவேளை போன்றுள்ளது. அந்த இடைவேளை 'திருச்சபை எடுத்துக் கொள்ளப்படுதல்' என்கிற இரகசியத்தில் முடிவுறும் (1கொரிந்தியர் 15:51-53, 1தெசலோனிக்கேயர் 4:16,17) திருச்சபை முழுமையடைந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, இஸ்ரவேல் குறித்த தீர்க்கதரிசனங்கள் மீண்டும் நிறைவேறத் தொடங்கும். மேலும் திருச்சபைக்கும், கிறிஸ்துவுக்குமுள்ள உறவைக் கவனிக்கவும். திருச்சபை கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதினால், திருச்சபையை உபத்திரவ காலத்திற்குள் இட்டுச் செல்வது என்பது, கிறிஸ்துவே இரண்டாம் முறையாக தேவ கோபாக்கினைக்குள் செல்வதற்கொப்பாகும்.

2. திருச்சபை பெரிய உபத்திரவ காலத்திற்குள் செல்லும் என்று வேதாகமத்தில் ஒரு சிறு குறிப்பு கூட இல்லை. விசுவாசிகள் பெரிய உபத்திரவ காலத்திற்கு ஆயத்தமாக இருக்கவேண்டுமென்ற எச்சரிப்பை ஓரிடத்திலும் காணமுடியாது. திருச்சபை பெரிய உபத்திரவ காலத்திற்குள் செல்ல வேண்டுமென்பது கடவுளின் திட்டமாக இருக்குமாயின் இக்காரியத்தைக் குறித்து ஆண்டவர் தம்முடைய சீடர்களிடம் கூறி இதைக் குறித்து எச்சரிப்புக் கொடுத்திருக்க மாட்டாரா? இருப்பினும் யோவான் அதிகாரங்கள் 13 முதல் 17 வரை கூறப்பட்டுள்ள பகுதியில் பெரிய உபத்திரவ காலம் குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை. (அவர் ‘தம்முடையவர்களோடு‘ பேசும்போது, திருச்சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்தும் ஏதும் கூறவில்லை. ஏனென்றால் அவைகள் யாவும் யூதருடன் தொடர்புள்ளவையாகும்). இவற்றைக் குறித்து அவர் மத்தேயு 24, 25 அதிகாரங்கள், மாற்கு அதிகாரம் 13, லூக்கா அதிகாரம் 21 இல் கூறியுள்ளார். இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களும், எச்சரிப்புக்களும், திருச்சபையுடன் எவ்விதத்திலும் தொடர்புடையன அல்ல. திருச்சபைக்கென நம்து ஆண்டவர் கூறியுள்ள சிறப்பான வார்த்தைகளை யோவான் 14:1-3 இல் காணலாம். இவற்றோடுகூட நிருபங்களில் திருச்சபை யைக் குறித்துச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனால் இவற்றுள் விசுவாசிகட்கு, பெரிய உபத்திரவ காலத்திற்கு தப்பும்படி கூறப்பட்ட எச்சரிப்புக்கள் எதையும் காணமுடியாது.

3. திருச்சபை பெரிய உபத்திரவ காலத்திற்குள் செல்லுமாயின், விசுவாசிகளை உற்சாகப்படுத்தும் பல வாக்குத்தத்த வசனங்கள் பொய்யான நம்பிக்கை யளிப்பதாகிவிடும். கிறிஸ்தவனின் பெரிய நம்பிக்கை மரணம் அல்ல, பரலோகமும் அல்ல. அது ‘ஆசீர்வாதமா எதிர்பார்ப்பு‘ எனலாம்.- தீத்து 2:11-13 வரை படிக்கவும். வேதாகமத்தில் கூறப்பட்ட கர்த்தருடைய வருகை எனப்படும் சத்தியம், நமது பரிசுத்த வாழ்வு (யோவான் 3:2,3), பொறுமை (யாக்கோபு 5:7,8), ஜாக்கிரதையுள்ள நடக்கை (1பேதுரு 1:13-15) போன்றவற்றிற்கு தூண்டுகோலாகவுள்ளது. திருச்சபை யானது உபத்திரவ காலத்திற்குள் செல்லுமாயின் நாம் உபத்திரவத்தை எதிர் நோக்கியிருக்க வேண்டுமேயன்றி ஆண்டவரின் சடுதியான வருகையை அல்ல. 1தெசலோனிக்கேயர் 1:10 பார்க்கவும்.

4. விசுவாசி கோபாக்கினையினின்று விடுதலை பெற்றாயிற்று. அவனது தண்டனை முடிந்து போயிற்றென்று வேதாகமம் போதிக்கிறது. ஆனால் பெரிய உபத்திரவ காலமோ பயமூட்டும் தண்டனையின் காலம், ஆட்டுக் குட்டியானவரின் கோபாக்கினையின் வேளையாகும். சங்கீதம் 2:5 இல் பெரிய உபத்திரவ காலம் என்பது, கடவுள் தமது எதிரிகள் மீது செலுத்தும் கோபாக்கினை என்று கூறப் பட்டுள்ளது. அப்படியிருக்க நாம் அவரது எதிரிகள் அல்ல. ஆகவே நமக்கென எவ்வித கோபாக்கினையும் கிடையாது. நம்முடைய பாவத்திற்குரிய தண்டனையைக் கிறிஸ்து, கல்வாரிச் சிலுவையில் ஏற்றுக் கொண்டார் (யோவான் 5:24, ரோமர் 5:5, 1தெசலோனிக்கேயர் 1:10, 5:9). கிறிஸ்தவர்கள் யாவரும் பெரிய உபத்திரவத்திற்குள் செல்ல வேண்டும் என்றிருந்தால், உயிருள்ள கிறிஸ்தவர்கள் மட்டும்தான் இந்தக் கொடிய தண்டனையை அடைய வேண்டும்.

5. வெளிப்படுத்தல் நூலில் வரப்போகின்ற நிகழ்ச்சிகள் பல விரிவாகக் கூறப்பட்டிருக்கக் காண்கிறோம். அதிலோ திருச்சபை பெரிய உபத்திரவகாலம் தொடங்கும் முன்பே, பரலோகில் இருப்பதைக் காணலாம். ஆட்டுக்குட்டியானவர் ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகத்தைத் திறந்த

*பின்னரே பெரிய உபத்திரவகாலம் வருகிறது. (வெளிப்படுத்தல் 5) இந்த முத்திரைகள் உடைக்கப்பட்ட பின்பே உபத்திரவம் ஆரம்பமாகின்றது (வெளிப்படுத்தல் 6)*

*6. திருச்சபை உபத்திரவ காலத்திற்குள் செல்லுமென்ற போதனை பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள மூன்று ஒப்புமைகட்கு விரோதமானது.*

*1. பிரளயத்திற்கு முன்பு ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (ஆதியாகமம் 5:24, எபிரெயர் 11:5). உயிரோடுள்ள விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படுவதற்குரிய ஒப்புமை இது(1தெசலோனிக்கேயர் 4:17). இது பூமியில் நிகழும் பயங்கரமான தண்டனைக்கு முன்னர் நேரிடும்.*

*2. பிரளயத்தின் போது நோவாவும் அவரது குடும்பத்தினரும் பாதுகாக்கப்பட்டது (ஆதியாகமம் 7:1-16). பெரிய உபத்திரவ காலத்தின்போது இஸ்ரவேல் பாதுகாக்கப் படுவதற்கு ஒப்புமையாக இதைக் கூறலாம். பெரிய உபத்திரவ காலத்தின் கொடூரம் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நிமித்தம் நாட்கள் குறைக்கப்படும். (மத்தேயு 24:22).*

*3. சோதோமிலிருந்து லோத்து விடுதலையாக்கப்பட்டது (ஆதியாகமம் 19:22). கடவுள் தம் திருச்சபையைப் பார்த்து இப்போது கூறுவது, 'நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது!'*

*7. இவ்வுலகிலுள்ள விசுவாசிகள், பாவிகளைத் தேவனோடு ஒப்புரவாகும்படி வேண்டுகிற ஸ்தானாபதிகளாக உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (2கொரிந்தியர் 5:20). சமாதானத்தைக் கொடுக்கும் தூதுவர்கள் (ஸ்தானாபதிகள்) இழிவுபடுத்தப்பட்டு, விரட்டப்பட்டால் அவர்களது அரசு அவர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும். அதன் பின்னர் போர் மூளும்! பெரிய உபத்திரவம் வரும் முன்பு கடவுள் தம்முடைய ஸ்தானாபதிகளை தம்மிடம் அழைத்துக் கொள்வார்!*

*இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்*

*ஏழை வெகுவாய்க் கலங்குறேனே!*

*என் நேசர் தன்முக ஜோதியதே யல்லால்*

*இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை*

---ஆனந்தமே....

## பாடம் 9 பூமியிலே ஒரு பொற்காலம்

*நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியை ஆயிரம் வருடம் அரசாளும் காலம் ஒன்று வரப்போகிறதென நாம் வேதாகமத்தின் கடைசிப் புத்தகத்தில் படிக்கிறோம். இதுவே பூமியிலே ஒரு பொற்காலமாக இருக்கும். ஆயிரவருட ஆட்சி இதுதான். வெளிப்படுத்தல் 20:1-7 பார்க்கவும். இந்த ஆயிர வருட காலத்தையே 'இனி வரும் உலகம்' (எபிரெயர் 2:5), 'தேவனுடைய இராஜ்யம்' (மாற்கு 1:14), 'கடைசி நாள்' (யோவான் 6:40), 'மறுஜென்ம காலம்' (மத்தேயு 19:28), 'இளைப்பாறுதலின் காலம்' (அப்போஸ்தலர் 3:19), 'எல்லாம் நிறைவேற்றித் தீருங்காலம்' (அப்போஸ்தலர் 3:21), 'இயேசு கிறிஸ்துவின் நாள்' (1கொரிந்தியர் 1:8,5:5, 2கொரிந்தியர் 1:14, பிலிப்பியர் 1:5) என்று பல்வேறு பெயர்களால் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆறாயிரம் ஆண்டுகால வரலாற்றைப் படிக்கும்போது, மனிதகுலத்தை மேம்படுத்த, மக்கள் பலர் பல்வேறு வகையான சட்டதிட்டங்களைப் புகுத்தினர். அவர் சமாதானத்திற்காகவும், வளம் பெருகவும் பாடுபட்டனர். ஆயினும் மனித முயற்சியால் எவ்விதப் பயனும் கிட்டவில்லை. அதற்குப்பதில் உலகில் குழப்பமும், துன்பமும் பெருகி வருகின்றன. இந்நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. சமாதானமும், வளமும் நிறைந்த ஒரு பொற்காலத்தை உருவாக்க வேண்டுமென மனிதன் செய்கின்ற எல்லா முயற்சியும் தோல்வியில் முடிவடைகிறது! இந்தப் புவியில் ஒரு நீதியுள்ள ஆட்சியை நிலைநிறுத்தப் போவதாக, கடவுள் வாக்களித்துள்ளார். 'உம்முடைய இராஜ்யம் வருவதாக' (மத்தேயு 6:10) என்று நாம் ஜெபிப்பது இதற்காகத்தான்! இராஜா வரும்போதுதான் அவரது இராஜ்யம் வரும். ஆகவே அவர் இதற்கென ஆயிர வருட ஆட்சிக்கு முன்னதாக வரவேண்டும். இது வெளிப்படையானது. நாம் இப்போது இருப்பது ஆயிர வருட ஆட்சியில் அல்ல. அந்த ஆயிர வருட ஆட்சியை நாம் உருவாக்க முடியாது, கொண்டுவர முடியாது. ஆண்டவர் மாத்திரமே இதைச் செய்ய முடியும். அவரே செய்வார்! ஆயிர வருட ஆட்சி எப்படி இருக்கும்? இராஜா வரும்போது என்ன நடக்கும்? பார்க்கலாம்.*

*1. சாத்தான் கட்டப்பட்டு, பாதாளக் குழியிலே தள்ளப்படும் வேளை இது. சாத்தான் பரவி வரும்போது அங்கு நிரந்தரமான சமாதானமும், வளமும் இருக்காது - வெளிப்படுத்தல் 20:1,2 படிக்கவும். சாத்தான் கல்வாரியிலே மறைமுகமாக முறியடிக்கப்பட்டான் (1யோவான் 3:8) கடவுளின் எதிராளியும், மனுக்குலத்தின் பகைவனுமாகிய அவன் வெளிப்படையாகக் கட்டப்பட்டு, பாதாளக் குழிக்குள் தள்ளப்படும்போது நமக்கு எவ்வளவு பெரிய விடுதலை அது! இனிமேலும் அவன் 'கெர்ச்சிக்கிற சிங்கம் போல' (1பேதுரு 5:8) அவன் சுற்றித்திரிய முடியாது. 'ஒளியின் தூதனுடைய' வேடம் பூண்டு (2கொரிந்தியர் 11:14) மக்களை இதற்கு மேலும் ஏமாற்ற முடியாது.*

*2. ஆண்டவர்தாமே, நம் கண்ணெதிரே பூமியை ஆளுகைச் செய்யும் காலம் இது. லூக்கா 1:31-33 வரை படிக்கவும். அவர் செய்யப் போகின்ற பல காரியங்கள் இதிலே கூறப்பட்டுள்ளன. இப்பொழுது இருக்கும் அவரது இராஜ்யம் ஆவிக்குரியது. அவர் தம் மக்களின் உள்ளங்களில் ஆளுகை செய்கிறார். (லூக்கா 17:21) அப்பொழுதோ அவர் வெளிப்படையாக உலகை ஆளுவார். - சங்கீதம் 2:6, ஏசாயா 24:23, எரேமியா 23:5,6, தானியேல் 7:13,14, சகரியா 9:10,14 படித்துப் பார்க்கவும். அது நீதியுள்ள ஆட்சியாயிருக்கும் (ஏசாயா 9:7,11:1-5) அப்பொழுது உலகில் சமாதானம் நிலவும் (ஏசாயா 2:4, 54:13, 55:12, 60:18, 65:25, 66:12, ஓசியா 2:18) அங்கே மகிழ்ச்சி பொங்கும் (ஏசாயா 35:10) வளம் பெருகும் (ஏசாயா 65:21-23, மீகா 4:4, ஆமோஸ் 9:13)*

*3. பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடனே ஆளுகை செய்யும் காலம் இது. வெளிப் படுத்தல் 20:4, 3:21 ஐப் படித்து மத்தேயு 19:27,28 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். இது எவ்வளவு பெரிய சிலாக்கியம் எத்தனை பொறுப்பு மிக்கது!*

*4. பூமியில் வியாதியின்றி முற்றுமாக மறைந்து போகும் காலம் இது. இதை நாம் ஏசாயா 33:24, சகரியா 14 ஆம் அதிகாரத்தில் படிக்கின்றோம்.*

*5. மரணத்தின் வல்லமை கட்டுப்படுத்தப்பட்டு அழிக்கப்படும் காலம் இது. வெளிப்படுத்தல் 20:14ஐப் படித்து, ஏசாயா 65:18-20, 1கொரிந்தியர் 15:15 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். ஆயிரவருட ஆட்சியில் மரணம் காணப்படாது. ஏனெனில் அது சட்டப்படி தண்டனையாக மட்டும் அளிக்கப்படுவது. இந்த அற்புதமான ஆயிர வருட ஆட்சியில் நுழைந்த யாவரும், அந்த காலம் முழுமையிலும், ஆரம்பம் முதல் முடிவுவரை அதிலே வாழுவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது.*

*6. விலங்குகளுக்கும்கூட ஆசீர்வாதமான காலம் இது. ஏசாயா 11:6-9, 65:25 படிக்கவும்.*

*7. போரும், பற்றாக்குறையும் இல்லாத காலம் அது. நாம் வாழும் இக்காலத்தேதான் போர் இருக்குமென ஆண்டவர் முன்னுரைத்துள்ளார். மத்தேயு 24:6 படிக்கவும். நமது ஆண்டவர் ஆளுகை செய்யும்போதோ, பற்றாக்குறையும், ஏழ்மையும் இருக்காதென்று ஏசாயா 2:2-5, யோவேல் 3:10, மீகா 4:3 இல் காண்கிறோம்.*

*8. ஆர்மெகெதோன் போரில் தப்பி மீந்த புறஜாதியாருக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் இது மிகுந்த ஆசீர்வாதமான் வேளையாயிருக்கும். ஏசாயா 27:6, சகரியா 8:23, 12:10, 13:1, ரோமர் 11:20 ஐ நாம் படித்து மத்தேயு 5:35 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.*

*9. எங்கும் நீதி நின்று நிலவும் காலம் இது*

*இக்காலத்திலே, நீதியினிமித்தம் கடவுளின் பிள்ளைகள் பாடுபட வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஆனால் கிறிஸ்துவின் ஆளுகையின் போது இது எவ்வளவு தலைகீழாய் மாறிப்போகும் பாருங்கள். ஏசாயா 1:16-18, எரேமியா 33:15, ஆபகூக் 2:14 பார்க்க.*

*10. யாவரும் வேறுபாடின்றி ஒருமித்து ஆராதிக்கும் காலம் இது. யாவரும் ஒன்றாக இணைந்து ஆண்டவரை ஆராதிப்பார்கள். ஏசாயா 45:23, 52:1,7,10, 66:17-22, செப்பனியா 3:9, மல்கியா 1:11, வெளிப்படுத்தல் 5:9-14*

*11. சாபம் நீக்கப்படும் வேளை இது.*

*படைப்பின் மீது விதிக்கப்பட்டிருந்த ஆரம்பகால சாபம் (ஆதியாகமம் 3:17-19) நீக்கப்படும். அப்பொழுதுதான் கடவுளின் பிரசன்னம் முழுமையாக உணரப்படும். முன் எப்பொழுதும் கண்டிராத நிலையில் நாம் அவரோடுகூட ஐக்கியப்படுவோம். (எசேக்கியேல் 37:27,28, சகரியா 2:10-13, வெளிப்படுத்தல் 21:3)*

*12. இறுதியாக நித்தியத்துடன் இணைக்கப்படும் காலம் இது*

*எவ்வளவுதான் ஆசீர்வாதம் நிறைந்ததாக இருந்தாலும் ஆயிர வருட ஆட்சி முழுமையாயிராது. சிலர் மரணம் அடைவர். சிலர் இராஜாவின் ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்வார்கள். இந்த ஆயிர வருட ஆட்சியின் இறுதியில் சாத்தான் தண்டனை பெற்று அக்கினிக் கடலில் தள்ளப்படும் முன்னர் கொஞ்ச காலத்திற்குக் கட்டவிழ்த்து விடப்படுவான் (வெளிப்படுத்தல் 20:7-10). சுத்திகரிக்கும் நெருப்பினால் இந்த பூமி சுட்டெரிக்கப்படும் (2பேதுரு 3:10) அதன் பின்னர் மகிமையும், ஆசீர்வாதமும் என்றென்றும் நிலவும்! அதன் பின்னர் பிலிப்பியர் 2:9-11 வரை கூறப்பட்டுள்ள யாவும் முழுமையாக நிறைவேறும். இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், அதாவது விசுவாசிக்கும் கிட்டும் மகிமையுள்ள எதிர்காலம் எனலாம்! நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள், அவரையே ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொண்டு கனம் பண்ணுகிற மக்கள் மட்டுமே இந்த ஆசீர்வாதத்தில் பங்கடைந்து, முடிவே இல்லாத நித்திய காலத்தை அவரோடுச் செலவிடுவர்.*

## பாடம் 10 ஒரு வேளை இன்று நேரிடலாம்!

தமக்குச் சொந்தமானவர்களைத் தம்மோடுச் சேர்த்துக்கொள்ள நமது ஆண்டவர் இயேசு திரும்பி வருவார் என்கிற நம்பிக்கை நிச்சயமானது. உறுதியானது. அதோடு அது உடனடியாக நடக்கவிருப்பது எனலாம். அவரோடுகூட இருக்கும்படி நம்மைத் தமது வீட்டிற்கு அழைத்துச் செல்ல அவர் வருவார் (யோவான் 14:3) என்று நாம் நம்புகிறோம். அவர் சீக்கிரமாக வரப்போகிறா ரெனவும், ஒரு வேளை இன்றே அவர் வரலாம் எனவும் நாம் நம்புகிறோம். இதனையே பேதுரு, 'எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று' (1பேதுரு 4:7) என்று குறிப்பிட்டுள்ளார். யூதரின் பாரம்பரியம் முடிவுறப் போகிறது என்றோ, உலக வாழ்க்கையின் முடிவு நெருங்குகிறதென்றோ, தம் மனதில் பேதுரு நினைத்தாரோ என்னவோ. ஆனால் அவர் இங்கே கூறியுள்ளது இந்தக் காலத்தின் முடிவையும், ஆண்டவரின் இரண்டாம் வருகையையும்தானென நம்பலாம். ஆதிக் கிறிஸ்தவர்கள் யாவரும் ஆண்டவரின் வருகையை நம்பி எதிர்நோக்கியிருந்தனர். இக்காலத்தே வாழும் நாமுங்கூட இந்த உண்மையின் அடிப்படையில் எதர்நோக்கி யிருப்போம் (யாக்கோபு 5:8) ஆண்டவர் இயேசு சீக்கிரமாக வருவாரானால் அது நமது வாழ்க்கையையும், ஊழியத்தையும் கவர்ந்திருக்கும். நம்முடைய பார்வையையும், நடக்கையையும் மாற்றியமைக்கும் செயலாக இரண்டாம் வருகை புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. நமது ஆண்டவர் சீக்கிரமாக வரப்போகிறார், எந்த நேரத்திலும் வருவாரென்ற எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் நம்மிலே எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டுவரும் தெரியுமா! பேதுரு கூறுவதை 1பேதுரு 4:7-11 வரை படித்துப் பாருங்கள்!

1. ஆண்டவர் இயேசு சீக்கிரத்தில் வரப்போகிறார் என்று நாம் நம்பினால் நாம் ஒரு அமைதலான, ஒழுங்கான வாழ்வை நடத்துவோம். வசனம் 7 கூறுவதைக் கவனிக்கவும். அவர் 'தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்' என்று மட்டும் எழுதாமல் 'ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து.....'என்று எழுதியுள்ளார். 'ஏனெனில் காலம் குறுகியுள்ளது, ஆகவே ஒழுங்குள்ள அமைதியான வாழ்வு நடத்துங்கள்' என்ற பொருள்பட எழுதியுள்ளார். ஆதி கிறிஸ்தவர்களுக்கு இந்த ஆலோசனைத் தேவைப்பட்டது. ஏனெனில் அவர்கள் வாழ்ந்த உலகம் தெய்வமேயற்ற, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை விசிவாசிக்கிற யாவருக்கும் விரோதமாய்ச் செயல்படுகிற மக்களால் நிறைந்து இருந்தது. நமக்கும்கூட இந்த ஆலோசனை தேவை. ஏனெனில் நாம் வாழும் உலகம்கூடக் கடவுளைப் பற்றிய நினைவே இல்லாத மக்களால் நிறைந்துள்ளது. நம்மைச் சுற்றியுள்ள அஞ்ஞான உலகிற்கு நாம் இழுப்புண்டு போகாதிருக்க காத்துக்கொள்ள வேண்டும். யுத்தங்களையும், யுத்தங்கள் குறித்தச் செய்திகளையும் கேள்விப்படும்போது (மத்தேயு 24:6) கலங்காது அமைதியோடும், நம்பிக்கையோடும் இருக்க வேண்டும். பயத்தோடும், குழப்பத்தோடும் இருப்பதற்குப் பதிலாகப் 'பூரண சமாதானம்' (ஏசாயா 26:3) ஆளுகை செய்யும். நீதிமொழிகள் 1:33.

2. ஆண்டவர் இயேசு சீக்கிரம் வரப்போகிறாரென்று நாம் நம்பினால், நாம் ஜெபிக்கிற மக்களாக இருக்கவேண்டும். வசனம் 7 இல் சுயக் கட்டுப்பாட்டுடன் இருந்தால்தான் நீங்கள் ஜெபிக்க முடியும் என்கிறார். 'தெளிந்த புத்தி' என்பது சுய கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் குறிக்கிறது. அப்படியிருக்கும்போதுதான் நாம் சோர்வின்றி, சோம்பலின்றி ஜெபிக்க முடியும். இதை நாம் செய்யும்போது, நமக்காக இதைச் செய்யாமல், மற்றவர்களுக்காக ஜெபிக்கும் ஜெபத்திற்கும் பதில் கிட்டும்படி செய்கிறோம். பிறருக்கென் நாம ஜெபிக்கும் ஜெபங்கள் நம்மில் பிரதிபலிக்கக் காணலாம். மற்றவர்களுக்கென நாம் ஜெபிக்கும்போது, நாமும் அதிகமாக ஆசீர்வாதம் பெறுவோம் என்பது உறுதி. யோபு 42:10 படிக்கவும். ஜெபத்தின் தத்துவத்தைப் புரிந்து கொள்வது கடினமாகும். ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்த விரும்பினால் நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்? அவர் இவ்விதமாக ஜெபிக்கக் கட்டளையிட்டுள்ளார் என்பதே இதற்குப் பதில். எசேக்கியேல் 36:37 படிக்கவும். சில காரியங்களுக்காக நாம் ஜெபித்தால் மட்டுமே கடவுள் பதிலளிப்பார். நாம் ஜெபிக்காவிட்டால் அவர் அதைச் செய்யமாட்டார். ஆகவே நாம் விழிப்போடும், மனத்தெளிவோடும் இருக்கவேண்டும். அதாவது சுய கட்டுப்பாட்டுடன் இருந்தால்தான் ஜெபிக்கமுடியும். எபேசியர் 6:18 படிக்கவும். நமது இரட்சகரின் வருகை சமீபமாயிருப்பதினால் அது நம்மை ஜெபிக்கத் தூண்டுவதாகவுள்ளது. ஆண்டவர் இயேசுவின் வருகை சமீபமென நாம் நம்பினால் நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டும். வசனம் 8ல் கூறப்பட்டுள்ள அன்புகூரலைப் பாருங்கள். 'எல்லாவற்றிற்கும் மேலாக' அன்புகூரவேண்டும். மற்றவற்றிற்கு முதலிடம் தராமல், ஆழ்ந்த அன்பு செலுத்த வேண்டும். நமக்குள்ளே இந்த அன்பை அனுபவிக்க வேண்டும். நாம் ஏன் இவ்வாறு அன்பு செலுத்தவேண்டும்?

அதற்குக் காரணமும் கொடுக்கப்பட்டுள்ளது. 'அன்பு திரளான பாவங்களை மூடும்'. அன்பு யாருடைய பாவங்களை மூடும்? நமது பாவங்களையா? பிறருடைய பாவங்களையா? அன்பு மன்னிப்பதோடு மறக்கவும் வழிவகுக்கும். கலாத்தியர் 5:22 படிக்கவும். இதை ரோமர் 5:5 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். மற்றவர்களிடம் அன்பு செலுத்த அது மட்டுமே வழியாகும். கடவுளின் அன்பு நமது உள்ளங்களில் நிரப்பப்படும்போது நாம் பிறரிடம் ஆழ்ந்து அன்புகூர முடியும். அதாவது வேதம் கூறுவதுபோல ஊக்கமான அன்புகூரமுடியும்.

4. ஆண்டவர் இயேசுவின் வருகை சீக்கிரம் வருகிறதென நாம் நம்பினதால் நம் நட்பைப் பெருக்க வேண்டும். வசனம் 9ன் ஆழ்ந்த அர்த்தம் இதுவாகும். நண்பர்களையும், அந்நியரையும் உபசரிப்பதைக் குறித்து இந்த வசனம் கூறுகிறது. முதல் நூற்றாண்டிலே இது இன்றியமையாத ஊழியமாக இருந்தது. இருப்பின் இக்காலத்திலுங்கூட விருந்தோம்பல் என்பது மிகப்பெரிய ஊழியம் எனலாம். இங்கு கூறப்பட்டுள்ள விருந்தோம்பல் என்பதன் மூலப்பொருள் நட்பை வளர்ப்பதற்கென இல்லத்தைத் திறப்பது மட்டுமல்ல, உள்ளத்தைத் திறப்பதையே குறிக்கும். இதுவும் ஒரு வகையில் வசனம் 8இல் கூறப்பட்டுள்ள அன்பின் வெளிப்பாடு எனலாம்.

5. ஆண்டவர் இயேசுவின் வருகை சமீபமென்று நாம் நம்பினால் ஆண்டவரின் ஊழியத்தில் தீவிரமாக இருக்கவேண்டும். வசனம் 10 இல் கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் சில வரங்களை, ஆவிக்குரிய வரங்களைக் கொடுத்துள்ளாரெனவும், நாம் அவற்றைப் பரிசுத்தவான்களின் பயனுக்கெனப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறியுள்ளதைக் காணலாம். ஒவ்வொரு விசுவாசிக்கும், பரிசுத்த ஆவியானவர் விசேஷித்த தெய்வீக ஈவுகளை அளித்துள்ளார். இந்த ஈவுகளை நாம் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் பயன்படுத்தப்படாத ஈவுகள் மங்கி மறைந்து விடும் - நியாயாதிபதிகள் 5:23, ஆமோஸ் 6:1 பார்க்கவும்.

6. ஆண்டவர் இயேசுவின் வருகை சமீபமென நாம் நம்பினால், அவருடைய நாமத்தினாலே நாம் தைரியமாகப் பேசவேண்டும். நாம் கடவுளின் வாயாக பயன்படவேண்டும் என்று வசனம் 11 இல் கட்டளை பெற்றுள்ளோம். கடவுள் தரும் பெலத்தைக் கொண்டே நாம் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும். அதாவது நாம் நம்முடைய பெலத்தினால் பேசாமல், பரிசுத்த ஆவியானவர் அருளும் பெலத்தைக் கொண்டே பேசவேண்டும். நமது இரட்சகரைக் குறித்துக் கேள்விப்படாதோர் பலர் நம்மைச் சுற்றிலும் இருக்கின்றனர். நாம் அவர்களிடம் பேசாவிட்டால் வேறு யார் பேசுவார்கள்? அப்போஸ்தலர் 4:19,20 பார்க்கவும். கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து நாம் நம்முடைய உறவினர், நண்பர்களிடம் கூறும்போது ஒரு பெரிய எழுப்புதல் தோன்றும். ஏன் இதை நாம் செய்யவில்லை? என்ன காரணம் கூறப் போகிறீர்கள்?

7. ஆண்டவர் இயேசுவின் வருகை சமீபமென நாம் நம்பினால், நாம் யாவற்றையும் கடவுளின் மகிமைக்கெனச் செய்யவேண்டும். வசனம் 11 எவ்வாறு முடிகிறதெனப் பாருங்கள். இதை 1கொரிந்தியர் 10:31 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். கடவுளை மகிமையடையச் செய்வது என்பது என்ன? அதாவது கடவுளின் நாம மகிமைக்கென, அவரைப் பிரியப்படுத்தும்படியான வழிகளில், நாம் சிந்திக்க, பேச, செயல்பட நாம் அவரது உதவியைச் சார்ந்திருக்க வேண்டுமென்பதே இதன் பொருள். கொலோசெயர் 3:17. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

ஒருவேளை இன்று நடக்கலாம்! நாம் படித்துத் தியானித்த இந்தப் பகுதியின் மூலம், பேதுரு நமக்குக்கூற விரும்பும் செய்தி இதுதான்! இந்தச் செய்தியைத்தான் நாம் கேட்கவேண்டும், அன்றாடம் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். - ஒரு வேளை ஆண்டவர் இயேசு இன்றே வருவார்.!